ஸ்ரீ:

# பாப்பாவினம்.

இது
மதுரைத் தமிழ்ச் சங்கத்துச்
"செந்தமிழ்" உதவிப்பத்திராசிரியர்
நு. சி. இராமாநுஜையங்காரால்
பரிசோதிக்கப் பெற்றது.

"செந்தமிழ்"ப்பிரசுரம்—ருக.

ரத் தமிழ்ச்சங்க முத்திராசாலை,
மதுரை.

1932.

# பாப்பாவினம்.

இது,

மதுரைத் தமிழ்ச் சங்கத்துச்

"செந்தமிழ்" உதவிப்பத்திராசிரியர்

திரு. கி. இராமாநுஜையங்காரால்

பரிசோதிக்கப் பெற்றது.

"செந்தமிழ்"ப்பிரசுரம்—௫௮

மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலை,

மதுரை.

1932.

ஸ்ரீ:

# இப்புத்தகத்திலடங்கியவை.


பக்கம்

1. முகவுரை ... ... ...

2. தற்சிறப்புப்பாயிரம் ... ...

3. பாப்பாவினம் ... ... ...

க. வெண்பா ... ... ... க—எ
உ. வெண்பாவினம் ... ... அ—கக
ங. ஆசிரியப்பா ... ... கக—ங0
ச. ஆசிரியப்பாவினம் ... ... ங0—ஙசா
ரு. கலிப்பா ... ... ... ஙசா—சாச
சா. கலிப்பாவினம் ... ... சாரு—சாஎ
எ. வஞ்சிப்பா ... ... ... சாஎ—சாகூ
அ. வஞ்சிப்பாவினம் ... ... சாகூ—எ0
கூ. மருட்பா ... ... ... எ0—எக
க0. பரிபாடல் ... ... ... எஉ—அஅ

4. விஷயசூசிகை ... ... ... அகூ

5. பாப்பாவினஞ்செய்யுண்முதற்குறிப்பு ... கூ

6. பிழையும் திருத்தமும் ... ...

ஸ்ரீ:

# முகவுரை.

பாப்பாவினம் என்பது, பாவும் பாவினமுமாக இயற்றப்பட்டதொரு பிரபந்தவிசேடத்தைக் குறிக்கும். இது, மாறன் பாப்பாவினம் எனவும் வழங்கப்படும்.

இதிற் காணப்படும் பாடல்கள், செய்யுட்குவேண்டும் நலனெல்லாம் ஒருங்குகொண்டனவாய்த் தொல்காப்பியச் செய்யுளியலிற்கூறிய இலக்கணங்க ளமைந்தனவாய், அவற்றின்பெயரும், அவற்றுளமைந்து கிடக்கும் அணியும், அகத்திணையும், புறத்திணையும், துறையும் முதலியனவும், யாப்பருங்கலக்காரிகையுடையார் முதலிய பிறநூலாசிரியர் கொள்கைகளும் விளங்க வரையப்பட்ட குறிப்புரையுடையனவாய்த் திகழ்கின்றன. அவற்றுள் இறுதிநின்ற ஐந்தும், இக்காலத்து வழக்கற்ற பரிபாடற்குதாரணமாக அகத்தியர் கூறிய ஐந்துறுப்புடன் சங்கத்தார் பரிபாடலின் நடையமைய இயற்றப்பட்டுள்ளன.

இதனை இயற்றினார் பெயர் முதலிய விவரமொன்றும் தெரியவில்லை. இது, மாறனலங்கார உரையாசிரியராகிய பேரைக் காரிரத்தினகவிராயரால் இயற்றப்பட்டதென்று, கும்பகோணம் அரசாங்கக்கல்லூரித் தமிழ்ப்பண்டிதர் வித்வான் ஸ்ரீமத் ஆ. மா. சடகோபராமாநுஜாசாரியரவர்கள் மாறனலங்காரவரலாற்றில் எழுதியுள்ளார்கள். அதற்கு யாதோராதாரமும் அவர்களாற் காட்டப்படவில்லை.

இந்நூற்செய்யுட்களின் நடைமுதலியவை மாறனலங்கார உதாரணச்செய்யுட்களின் நடைமுதலியவற்றையொத்தனவாயிருத்தலாலும், மாறனலங்காரத்துள் உதாரணமாக எடுத்தாளப்பட்டனவும் திருக்குருகைப்பெருமாள்கவிராயரியற்றியனவுமான குருகாமான்மியச்செய்யுட்களிற் சிலவும், நம்பெருமாள் மும்மணிக்கோவைச் செய்யுட்களும், வேறுபலசெய்யுட்களும் இந்நூலுட்காணப்படுதலாலும் இது, மாறனலங்கார ஆசிரியராகிய திருக்குருகைப்பெருமாள்கவிராயரால் தொகுத்தியற்றப்பட்டிருக்கலாமென்று தோன்றுகிறது.

மேலும், எழுத்து சொல் பொருள் யாப்பு அணி: என்னும் தமிழிலக்கணமைந்தனுள், செய்யுளைப்பற்றிவருவன பொருளும் அணியுமாம். அவற்றுள், பொருளிலக்கணத்துள், பிற்காலத்துப் பயிற்சி குன்றிய புறப்பொருட்பகுதி யொழித்து, அகப்பொருள் பற்றி மாறனகப்பொருளும், அணியினுட் பொருளணி சொல்லணியாதிய வெல்லாமடங்க மாறனலங்காரமும், தம் ஈடுபாடுதோன்றப் பகவத் பாகவத விஷயமான உதாரணச்செய்யுட்களுடன் வேண்டுவனகூட்டி விரித்தியற்றியதிருக்குருகைப்பெருமாள்கவிராயர், அவ்வாறே பொருளும் அணியுமாகிய அவற்றுக் கிடனாய்விளங்கும் யாப்பிலக்கணங்களமைய இதனை யியற்றினரென்று ஊகித்தலும் பொருந்துவதாம்.

அன்றியும் இது, பின்னும் வேண்டுவன கூட்டித் திருத்தி விரித்துச் செம்மைசெய்துகொள்ளுமாறு முற்படவரைந்த வரைவேயாய்ப் பின் அவ்வாறு செம்மைசெய்யப்படாதநிலையில் உள்ளதென்பது, இதன் ௩௦, ௩௫ம் பக்கங்களின் கீழ்க்குறிப்பு முதலியவற்றால் விளங்குதலால் திருக்குருகைப்பெருமாள்கவிராயரே, குருகாமான்மியம், மாறனலங்காரம், மாறனகப்பொருள், நம்பெருமாள்மும்மணிக்கோவை முதலிய நூல்களைச் செய்து பின்னர்த் தம் அந்திமதசையில் இந்நூலை யியற்றி யிதனைச் செப்பஞ்செய்துமுடிக்குமுன் காலகதி யடைந்துவிட்டனரோ என்று சங்கித்தற்கு மிடனாகிறது. இது நிற்க.

இந்நூலின் ஏட்டுப்பிரதியொன்று செந்தமிழ்ப்பத்திராசிரியர் ஸ்ரீ உப. வே. திரு நாராயணையங்கார்ஸ்வாமி அவர்களிடமிருந்து நெடுநாளைக்குமுன் எனக்குக் கிடைத்தது. வேறுசில பிரதிகளும் பெற்று ஆராய்ந்து இதனை வெளியிடக்கருதி இதுவரை முயன்றும் வேறுபிரதிகள் கிடைத்தில. கிடைத்த ஒருபிரதியும் சிதல்முதலியவற்றாலழிந்தொழியாது காக்கக்கருதி, அதனை அதிலுள்ளவாறு, பொருள்விளங்காத இடங்களில் வினாக்குறி (?) கொடுத்துச் செந்தமிழிற் புத்தகவுருவில் வெளியிட்டு வாலானேன். இந்நூலின் இறுதிப்பகுதி செந்தமிழில் வெளியிடப்படுந்தருணத்தில் இந்நூல் முன்னமே கலாநிலயத்தில் வெளியிடப்பட்டுளதென்றறிந்தேன். கலாநிலயத்தில் வெளிவந்த இந்நூற் பகுதிகளைப் பண்ணுருட்டிப் போர்டுஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் மகா-ள-ள-ஸ்ரீ வித்வான் கோ. சுந்தரராமாநுஜநாயுடு அவர்கள் அனுப்பியுதவினார்கள். அவர்கள் உதவி பாராட்டத்தக்கது. அவர்கள் பிரதியும் சில திருத்தங்கள்செய்வதற்கு உதவியது.

மாறனலங்காரத்துள் உதாரணமாக எடுத்தாளப்பட்ட செய்யுட்களிற் பல இந்நூலகத்துப் பயின்றுள்ளமை முன்னரே குறிக்கப்பட்டது. அவற்றுள் மாறனலங்காரத்திற் கண்ட பாடபேதம் முதலியன இந்நூலகத்து அவை வந்த பக்கங்களிற் கீழ்க்குறிப்பிற் காட்டப்பட்டுள்ளன.

இந்நூல், மாறன் பாப்பாவினம் என்று வழங்கப்படுமேனும், ஏட்டுப்பிரதியினிறுதியிற் காணப்படும் தற்சிறப்புப்பாயிரச் செய்யுளிலும் ஏட்டுப்பிரதியின் தொடக்கத்திலும் முடிவிலும் பாப்பாவினம், பாப்பாவினம் முற்றும் என்றே காணப்படுதலால், பாப்பாவினம் என்ற பெயர் கொடுத்தும், ஏட்டுப்பிரதியில் வஞ்சிப்பாவின் முடிவுவரை ஓலையிதழெண்கள் தொடர்ந்திட்டு வஞ்சிப்பாவின்முடிவிற் பாப்பாவினம் முற்றும் என்று எழுதிப் பரிபாடற்கவிகளெழுதிய ஓலையிதழ்கட்குத் தனியெண்கள்கொடுத்து முடிவிற் பாப்பாவினம் முற்றும் என்று மறித்தும் குறித்திருத்தலால் அவ்வாறே பரிபாடற் கவிகளைத் தனியெண்கள் கொடுத்துப் பிரித்தும் பதிக்கலாயிற்று.

அறிவாற் பெரியார் மேற்கோடற்குரிய இப்பணியைச் சிற்றறிவினனாகிய யான் மேற்கொண்டமையால் நேர்ந்த பிழைகளை அறிஞர் பொறுத்தருள்வார்களாக.

இங்ஙனம்,

திரு. கி. இராமநுஜையங்கார்,
செந்தமிழ் உதவிப்பத்திராசிரியர்,
மதுரைத்தமிழ்ச்சங்கம்,
மதுரை.

ஸ்ரீ:

# தற்சிறப்புப் பாயிரம்.

[தெய்வ வணக்கம்.]

என்றுந் திருமாற்கே யாளாவே னெம்பெருமா
னென்றும் எனக்கே பிரானுவான்—என்றும்
பிறவாத பேராளன் பேரா யிராமு
மறவாது வாழ்த்துக வாய்.

[செயப்படுபொருள்.]

தேவர் திருவள் ளுவர்புலமைச் செல்வத்தால்
யாவரினை யென்பா ரிசைத்தகுறட்—பாவினையும்
பாடினேன் பாப்பா வினம்பாடப் புல்லறிவா
ளுடினே னென்பதனு ளுன்.

ஸ்ரீ:

# பாப்பாவினம்.

## வெண்பா.

1 திருமகளோ பார்மகளோ தென்னரங்கன் வெற்பில்
வருமகளோ யாரோவிம் மாது.

இது, ஒருவிகற்பக் குறள்வெண்பா. அலங்காரம்—சுத்தசந்தயம். பகுதி—இயற்கை. துறை—ஐயுறல். (க)

2 மாத ரிலவிதழ்போன் மாண்பிற்றோ மாதவனால்
வாரோ ரருந்து மருந்து

இது, இரண்டு விகற்பக் குறள் வெண்பா. அலங்காரம்—அவயவ வுவமை. பகுதி—இதுவுமது. துறை—புணர்ச்சியின் மகிழ்தல். (உ)

3 மலைமதிதேன் மாறன் வரைவேல் விழியாண்
முலைவதன நண்பா மொழி.

இதுவும் ஒருவிகற்பக் குறள்வெண்பா. அலங்காரம்—நிரனிரை யுவமை. பகுதி—பாங்கற்கூட்டம். துறை—இயல்பிடங்கூறல். (ங)

4 தேர்வலவா வென்னு ளுகின்முந்திற் செங்கண்மால்
காரகத்தாட் கென்வாச கம்.

இதுவு மொருவிகற்பக் குறள் வெண்பா. அலங்காரம்—சுவையி னுள் அழுகை; வறுமைபற்றியவழுகை*. பகுதி—பொருள்வயிற் பிரிதல். துறை—வலவனொடுகூறல்.

ஆக விவற்றுள்,—காசு பிறப்பு மலர் நாள் என்னு நான்குதாரணத் தான் வந்திற்றவாறு கண்டுகொள்க. (ச)

*மாறனலங்காரத்தில் இது, 'இளிவரல்பற்றிவந்தஅழுகை' என்று காட்டப் பட்டிருக்கிறது (பக். ௩0௪,)

5 *நிலம னிலமனல்வா னீரென் பனவா
யலமனலம னமலன்—புலனைந்தும்
வென்றார் தொழுமால் விளங்குதிரு விண்ணகா
மென்றார்க்கு முண்டோ விடர்.

இது, இரண்டுவிகற்பத்தா னிரண்டுகுறள்வெண்பாவாய் நடுவு தொடைக்கேற்ற தனிச்சொல்லா லடிமூஉய் வந்த விருகுறணேரிசை வெண்பா. அலங்காரம் சொல்லணியினுள், முதலடியு மிரண்டாமடியு மிடைவிடா வடிமுதன் மடக்கு. திணை—பாடாண். துறை—நகரவாழ்த்து.

6 உலகு புகழரங்கத் துத்தமமெய்ஞ் ஞானத்
திலக ருடண்பயின்று சென்று—புலவீர்
நிலமிசைதாழ்ந் தேத்தி னெடுமா லுமக்குந்
தலமிசைப்பே ரின்பந் தரும்.

இதுவு மிரண்டுகுறள்வெண்பாவாய் நடுவு தொடைக்கேற்ற தனிச்சொல்லா லடிமூஉ யொருவிகற்பத்தான்வந்த விருகுறணேரிசைவெண்பா. திணை-இதுவுமது. துறை—புலவராற்றுப்படை. (சு)

7 †நாவலவன் பின்போந்த நன்னீர்த் திருவரங்கங்
காவலன்பொற் றாளாங் கமலத்தே—பாவலர்தம்
பாமாலை சூட்டாதப் பாமாலை யையவனே
தாமா னிடர்க்களிக்குஞ் சால்பு.

இது, திணை—பாடாண். துறை—பழிச்சினர்ப்பணிதல். அலங்காரம்—தொகைவிரியுருவகம். (எ)

8 பூங்கமலக் கோயிலாள் புத்தமுதி னுட்பிறந்தாள்
வீங்கு துணைமுலையாள் வெண்ணகையா—ளோங்குபுனற்
பொன்னி நடுவுட் பொருண்மார் பகத்தாளென்
சென்னி பிரியாத் திரு.

திணை—இதுவுமது. துறை—கடவுள்வாழ்த்து. அலங்காரம்—பொருட்டன்மை. (அ)

* 'நிலம நிலமன் னெடுவெளிதீ நீரா' யென்பது மாறனலங்காரத்துக்கண்ட பாடம் (பக். ௩௮௨.)

†'நாவலன்பின் போந்த நறுநீர்த் திருவரங்க'மென்பது 'மாறனலங்காரத்துக் கண்டபாடம் (பக். ௭௪).

9 அருண்மனையா ளாயுவந்த தாழியான் கோடு
பொருதிரைப்பாற் றெள்ளமுதிற் போந்த—திருவரங்கம்
பூம்பதுமக் கண்முகிழ்த்துப் புத்தேளிர் கைதொழுமால்
பாம்பணைமேல் வைகும் பதி.

திணையுந் துறையு மிதுவுமது. அலங்காரம்—இணையிடைநிலைப் பெயர்நிரனிரை.

இவைமூன்றும் முதற்குறட்பாவினோடு தனிச்சொலிடை வேறுபட் டிரண்டசையானு மோரசையானு மாசிட் டிரண்டுவிகற்பத்தான்வந்த வாசிடைநேரிசைவெண்பா. (௯)

10 சிரந்தா னிழந்தா னயனச் சிரங்கொய்
திரந்தா னிரப்பொழிப்பா யென்ன—வரந்தான்
புரந்தா னிருப்பப் பொருள்வேறுண் டென்று
பாந்தானுண் டென்ன பயன்.

இதுவுந் திணையுந் துறையு மது. அலங்காரம்—சுவையினுள், பேதைமைபற்றிவந்த நகை. (௧௦)

11 மாதங்க மூலமெனும் வண்குருகூர் மால்வரையோர்
மாதங்க மஞ்ச வருபோழ்திம்—மாதங்க
மாதங்க வாகுவலை யத்தணைத்து வல்விரைந்தம்
மாதங்கம் வென்றானோர் மன்.

இது, பகுதி—வரைபொருட்பிரிவு. துறை—(தோழி கூற்று. செவிலி முன்னிலை) களிற்றிடையுதவிக் கறத்தொடுநிற்றல். அலங்காரம்—சொற்பொருட்பின்வருநிலை.

இவை முதற்குறட்பாவி னிறுதிக்க ணோரசையானு மீரசையானு மாசிட் டொருவிகற்பத்தான்வந்த வாசிடை நேரிசைவெண்பா. (௧௧)

12 காவலர்போற் காவலர்போற் காதங் கமழுநந்தை
காவலனைக் காவலர்தூய்க் காவலெனக் கற்றுணர்ந்தோர்
காவலனே காவலனே காத்தியெனக் கண்டுற்றுங்
காவலகா வென்னார் கலர்.

இது, திணை—பொதுவியல். துறை—பொருண்மொழிக்காஞ்சி. அலங்காரம்—இதுவுமது. (௧௨)

13 வாராய்நன் னெஞ்சமே வைகலுநம் பாவிளமை
தீராழைப் பெய்துந் திறமின் றுணர்ந்தனமா
ஞரா யணன்புகழே நாடியினி நாஞ்சனனஞ்
சாராத தாராய்தல் சால்பு.

இது, திணை—வாகை. துறை—பொருளொடுபுகறல். அலங்காரம்—சுவையினுள், கல்விபற்றிய பெருமிதம்.

இவையிரண்டும் நான்கடியாய்த் தனிச்சொல்லின்றி யொருவிகற்பத் தான்வந்த வின்னிசைவெண்பா. (கங)

14 இவ்வுலகத் தின்பமுவர்த் தெஞ்ஞான்றும் பூமகள்கோ
னவ்வுலகத் தின்ப மதுவே விருப்புற்றார்
முந்நீர் வளாக முழுதுறினும் வாய்க்கொள்ளா
ருய்ந்நீர வல்லா வுரை.

இதுவும் திணை—வாகை. துறை—சால்புமுல்லை. அலங்காரம்—இதுவுமது. இது தனிச்சொல்லின்றி யிரண்டுவிகற்பத்தான்வந்த இன்னிசைவெண்பா. (கச)

15 மண்ணுயிரே வான்பிரம மாதவனன் றென்றுரைத்தல்
பொய்கொலை கள்ளுண்டல் பொருள்வெளவ லிவ்வனைத்து
மின்றே சிறிய ரிடத்தன விவ்வூழிக்
கடைக்கா லென்செய்யார் கலர்.

இது, திணை—பொதுவியல். துறை—முதுகாஞ்சி. அலங்காரம்—பேதைமைபற்றிய நகை. (கரு)

16 கண்ணனருள் பெற்றார்நன் கல்வியே செல்வமெனக்
கொல்லா விரதங் குறிக்கொள்ப வேறுசிலர்
தீக்கொலையிற் செய்பொருளே செல்வமென நின்றனரா
லென்னே யுலகியற்கை யென்.

திணை—இதுவுமது. துறை—பொதுமொழிக்காஞ்சி. அலங்காரம்—சுவையினு ளிழிவுபற்றிய வழுகை.

இவையிரண்டும் பலவிகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா. ()

## வெண்பா.

17 கோங்கரும்பு போலுங் குவிமுலைக ளாம்பலகத்
தாங்கரும்பு முல்லை யரும்பேய்க்கும்—பூங்குழற்குச்
செவ்வாயும் வெண்ணகையுஞ் செண்பகமா றன்சிலம்பிற்
காமர் சுனைக்காவி கண்.

இஃ திரண்டாமடி யிறுதி தனிச்சொற்பெற்று மூன்றுவிகற்பத் தான்வந்த வின்னிசைவெண்பா. அலங்காரம்—தொகைவிரியுவமை. பகுதி—பாங்கற்கூட்டம். துறை—இயல்பிடங்கூறல். (கஎ)

18 நாராய ணாய நமவென்றே நாவிற
வோரா யிரமென் றுரைத்தகவிப் பாவமுத
மாராய் பவர்க்கடிமை யாகினேன்—வாராணிங்
கென்பா லொருநாள் யமன்.

இது, மூன்றாமடியினிறுதி தனிச்சொற்பெற்று இரண்டுவிகற்பத் தான்வந்த வின்னிசைவெண்பா. திணை—வஞ்சி. துறை—நெடுமொழி. அலங்காரமு மது. (கஅ)

19 மாதராய் தென்னரங்கன் மால்வரைவாழ் மாதராள்
காம னிரதியெனுங் காட்சியாள்—காமவேள்
பூவாளி யென்பவற்றுண் மன்னுயிருண் பூவாளி
கண்டார் நிறையினையுண் கண்.

இஃ தடிதொறு மொரூஉத்தொடைபெற்று நேரிசைவெண்பாவிற் சிறிது வேறுபட்டுவந்த வின்னிசைவெண்பா. பகுதி—சேட்படை. துறை—அவயவங்கூறல். அலங்காரம்—தொகைவிரியுவமை. (கக)

20 இமிழ்திரைநீர் ஞாலத் திருளிரிய வான்றோய்ந்
துமிழ்கதிர்வெண் டிங்க ளுடனேயெந் ஞான்றும்
வலஞ்செய் சுவண வடவரைபோன் மாடம்
பொலஞ்செய் மதிள்கோ புரஞ்சிகா பந்தி
யிலங்கு மெழிலரங்கத் தெம்பிரான் பல்புகழைப்
பாடினார் பாதமலர் பாடிப் பணிமுடிமேற்
சூடினார்க் குண்டோ துயர்.

இஃ தேழடித்தாய்வந்த பலவிகற்பப் பஃறொடைவெண்பா. அலங்காரம்—பலபொருட்கொருபொருளுவமை. திணை—பாடாண். துறை—பழிச்சினர்ப்பணிதல் (உ0)

21 தண்டுழாய் மார்பன் வடமலைசார் தண்புறவின்
விண்டுழா யோங்கி யிடைகோங்கின் கொம்பருழ
மண்டுகா ருக்க குறுந்திவலை வண்டளவங்
கண்டிகா ரென்று கடுக்கை யுடன்மலர்தல்
பண்டுநங் கேள்வர் பருவங் குறித்ததெனக்
கொண்டதெவ னன்னெஞ்சே கூறு.

இது, திணை—பெருந்திணை(ப்படலம்). துறை—பருவமயங்கல். தலைவிகூற்று. இஃது தாறடியான்வந்த ஒருவிகற்பப் பஃறொடைவெண்பா. அலங்காரம்—திரிவதிசயம். (உக)

22 மாதவனை யெவ்வுள் வழுத்தியமெய்ம் மாதவர்தா
மின்ப முறவெதிர்சென் றீதிறனு மின்பமுடன்
பேரின்ப மெய்துவது மீறிலாப் பேரின்பப்
பொன்னே நிதியந் தருமெனமுன் பொன்னனையாட்
குற்றதை யெவ் வாறுரைப்பே னுற்று.

இது, பொருள்வயிற் பிரிதல். துறை—வாட்டங்கூறல். அலங்காரம்—அவயவியுவமை. இஃது ஐந்தடியா யடிதோறு மொரூஉத்தொடை பெற்றுப் பலவிகற்பத்தான்வந்த பஃறொடைவெண்பா. (உஉ)

23 கேளா திருந்திலேன் கேசவா வென்பதனை
வாளா திருந்திலேன் வாழ்த்தினேன்—ஞாளாளூர்க்
காளானே னென்னிணையிங் கார்

இஃதொருவிகற்பத்தான்வந்த நேரிசைச் சிந்தியல்வெண்பா. திணை—வஞ்சி. துறை—நெடுமொழி. அலங்காரம்—பொருமிதஞ்சார்ந்த வுவமை; நெடிமொழிகூறல். (உங)

24 திருந்திழையாய் மாறன் றிருவாய் மொழியே
மருந்துபிற விப்பிணிக்கு மாதர்—தநம்பிணிக்கு
வாய்ந்தமருந் தென்பார் மடல்.

இது, பகுதி—மடல். துறை—உலகின்மேல்வைத்துக் கூறல். அலங்காரம்—மாட்டேறில்லா (ரூபகம்;) ஏகதேச வுருவகம். இஃதிரண்டு விகற்பத்தான்வந்த நேரிசைச்சிந்தியல் வெண்பா. (உச)

25 வழிமதுத்தார் மாறன் மணிவரைமேன் மாதர்
விழியெழுதி னாலுமிணை வெற்பெழுதி னாலு
மொழியெழுத லாமோ மொழி.

பகுதி—இதுவுமது. துறை—எழுதவரிதென்றல். அலங்காரம்—இதுவுமது. (மாட்டேறில்லாத வேகாங்கரூபகம்.) இஃதொருவிகற்பத் தான்வந்த இன்னிசைச்சிந்தியல்வெண்பா. (உரு)

26 சோலை மலையழகர் தோண்மாலை காமுறுமுன்
மாலையா யாமமாய் வைகறையா யல்கிரவின்
றென்னேநீட் டித்த தெவன்.

திணை—பெண்பாற்கூற்றுக் கைக்கிளை. துறை—இரவுநீடுபருவரல். அலங்காரம்—சுவையினுள் தன்கட் டோன்றிய வறுமைபற்றிய வழுகை. இஃதிரண்டுவிகற்பத்தான்வந்த வின்னிசைச்சிந்தியல்வெண்பா. (உசு)

27 நாணு நிறையு நறுநுதலுன் மாணிழையா
டந்தவன் காமத் தழல்கதுவ வெந்து
தருமடன்மா வேற்றந் தரும்.

இது, பகுதி—மடல். துறை—நாணழிவுரைத்தல். அலங்காரம்—ஏகதேச வுருவகம். இதுவும் மூன்றடியா யொரூஉத்தொடைபெற்றுத் தனிச்சொல்லின்றிப் பலவிகற்பத்தான்வந்த வின்னிசைச்சிந்தியல் வெண்பா. (உஎ)

28 நாரா யணனே நமவென் றுரைப்பவர்பால்
வாரா தொருநாளும் வல்வினைதான்
சாரா னொருதலையாய்த் தண்டதரன் சாராவாம்
போத மாயப் பிறப்பு.

இது, சவலைவெண்பாட்டு. என்னை? "கனியிரு குறளாய் நான்கடி யுடைத்தாய்த், தனிவா வில்லது சவலைவெண் பாட்டே" என விக்காலத் துள்ளோர் பெயரிட்டு வழங்கும் வேறுபாடென வுணர்க. அன்றியும், மூதுரையினுள்ளும், "அட்டாலும் பால்சுவையிற் குன்றா தளவளாய், நட்டாலு நண்பல்லார் நண்பல்லர், கெட்டாலு மேன்மக்கண் மேன்மக்க ளேசங்கு, சுட்டாலும் வெண்மை தரும்" என்பதூஉ மிப்பாவென வுணர்க. (உஅ)

வெண்பா முற்றும்.

## வெண்பாவினம்.

29 பெருநூல் பிறபல கற்பதின் மாற
னொருநூல் கற்ப தூதிய முயிர்க்கே.

இது, குறள்வெண்பாவிற் கினமாகிய வெண்செந்துறை. இது விழுமியபொருளு மொழுகியவோசையுமாக வரல்வேண்டுமென்ற முறையே வந்தவாறு கண்டுகொள்க. (இது) திணை—காஞ்சி துறை—முதுமொழிக்காஞ்சி. அலங்காரம்—சுவையிறுள், கல்விபற்றிய பெருமிதம். (க)

30 அண்டர் நாயக னரங்கன தடித்தளி ரணிமுடி மிசைபுனைதூயோர்
மண்டு தெண்டிரைக் கடற்புவி யிடைப்பிற வாரே.

இது, திணை—பாடாண். துறை—பழிச்சினர்ப்பணிதல். அலங்காரம்—ஏகாங்கரூபகம். இஃ தீற்றடிகுறைந் திரண்டடியாய்ப் பலசீரான் வந்தமையாற் குறட்டாழிசை. (உ)

31 நிலையி லாதன மூன்றுமே நிலையெனு நினைவொடு
நெடியமா லடியிணை நினையாதார்.
தொலைவி லாப்பவக் கடலிடை யழுந்துபு துயர்தலைப் படுவாரே.

இதுவு மீற்றடிகுறைந் திரண்டடியா யொருவிகற்பத்தான வந்தமையாற் குறட்டாழிசை. இது திணை—பொதுவியல். துறை—பெருங்காஞ்சி. அலங்காரம்—ஏகதேசரூபகம். (ங)

32 அம்புய மாதன் புறுமால் மலர்ப்பதந்
தம்பமென் றுய்ந்திலார் தர்ம மெய்தார்.

இது, விழுமிய பொருளு மொழுகிய வோசையு மின்றி யிரண்டடியுந் தம்மு ளளவொத்து வந்தமையாற் செந்துறைச் சிதைவுத் தாழிசைக் குறள். அலங்காரம்—தொகையுவமை. திணை—பொதுவியல். துறை—முதுமொழிக்காஞ்சி. (ச)

33 புரவலர்நீத் தார்தமக்குப் பூமகள்கோன் றிருநறையூ
ரிரவலரிக் காமம் யமன்.

இது, செப்பலோசையிற் சிதைந்து வேற்றுத்தளைதட்டுக் குறள் வெண்பாவிற் சிதைந்துவந்த தாழிசைக்குறள். அலங்காரம்—முன்னவிலக்கினுள் பொருள்விலக்கு. திணை—வெண்பாற்கூற்றுப் பெருந்திணை. துறை—பொழுது கண்டிரங்கல். (டு)

34 மூவா மறைக்கு முதன்மொழியாய் நின்றதுவு—முகுந்தனும
மோவா நமன்வந் தடக்கா தொழிப்பதுவு—முகுந்தனுமந்
தாவாத பேரின்பந் தனைவிழைவார் சாற்றுவது—முகுந்தனுமம்.

இது மூன்றடியாய் முகுந்தனுமமென்னுந் தனிச்சொற் பெற்று வந்த வெளிவிருத்தம். திணை—பாடாண். துறை—கடவுள்வாழ்த்து. அலங்காரம்—சுவையினுள், கல்விபற்றிய பெருமிதம். (௬)

35 நாரா யணனே நரர்பேர் புகழா—தருள்கூர்வாய்
போரா யிரவா பிறர்தே நயவா—தருள்கூர்வாய்
கூரா ழியனே நமனார் குறுகா—தருள்கூர்வாய்
ஆரா வமுதன் றருள்வாய் பிறவா—தருள்கூர்வாய்.

இது, நான்கடியா யருள்கூர்வா யென்னுந் தனிச்சொற்பெற்றுவந்த வெளிவிருத்தம். இதுவுந் திணையுந் துறையு மது. அலங்காரம்—சுவையினுள் அசைவுபற்றிவந்த வழுகை. (௭)

36 உண்டிக் காய்மா ணிடர்பே ருரையா
ரண்டத் தப்பா லந்தா மத்தான்
றொண்டர்க் காட்செய் பவர்.

இது மூன்றடியா யாசிரியத்தளையான்வந்த வெண்டாழிசை. (௮)

37 படர்சிறைவண் டினந்துதைந்தே ழிசையெழுப்பு நறைவருளப்
பைந்தா மத்தான்
அடரிவளைக் கொம்பரிற்செந் தேனெனவே யினிமைதருஞ்
சொல்லீர் சொல்லீர்
வடவரைபோற் பணமுலைக்கீழ் மதித்திடுதற் குளதாய
விடர்பெறுநுண் ணிடையினைக்கட் புலங்கொளவிங் கேதென்றே.

இது நான்கடியா யீற்றடியிரண்டும் இரண்டுசீர் குறைந்துவந்த வேற்றொலி வெண்டுறை. பகுதி—மதியுடன்படுதல். துறை—இடைவினாதல். அலங்காரம்—அவயவவுவமை. (௯)

38 ஏனைக் கடவுளர்பா லெவ்வாறும் பெற்றிடுக்க ணிழைத்த லாலே
கானத் துடைந்தாக்கர் கட்டழித்தான் றாள்பரவார்
மானத்தின் மாண்பியந்த மானமும் வேறில்லையே.

இது மூன்றடியா யீற்றடி யிரண்டு மிரண்டுசீர் குறைந்துவந்த வோரொலி வெண்டுறை. திணை—பாடாண். துறை கடவுள்வாழ்த்து. அலங்காரம்—சுவையினுள் பேதைமைபற்றிய நகை. (௧௦)

39 தலையவிழ்தண் ணறவருந்திச் சுரும்பிமிர்பூந் தண்டுளபத் தாரா னறன்
விளைவளர்வண் புகழ்த்திருமால் பணிவரைமேன் மூன்றுமத விழுது கூர்கைம்
மலையுளதோ வந்ததென்ப ரஃதன்றி வாளியொடுங்
கலையுளதோ வந்ததென்பர் கறையோடுங் கண்ணின்றிக்
கொலையுளவாம் படிவேட்டை குறிக்கொள்வா ரிடந்தழிய
சிலையுளதோ வெனினுடக்குந் திண்சிலையுஞ் சினைதருபச்
சிலையுளரா லொளியிலரா லிவரெண்ணந் தெளிவரிதே.

இஃ தேழடியாய் முதலிரண்டடியு மறுசீரா யோரோசையாய்ப் பின்னைந்தடியும் வேறோரோசையாய் வந்த வேற்றொலி வெண்டுறை. ஐந்தடியானும் ஆறடியானும் வருவன யாப்பருங்கலவிருத்தியுட் கண்டுகொள்க. பகுதி—இருவருமுளவழி யவன்வரவுணர்தல். துறை—ஐயுறுதல். அலங்காரம்—அற்புதம். (௧௧)

40 மதுமகி ழணிதரு மார்பான் கூறிய
முதுமொழி யுரைதமிழ் மறைமுழு துற்று
ரிதுபொரு ளெனுமுரா னெய்துவ ரெய்தா
ரெதுபொரு ளதுபொரு ளெனுமொது மலர்நூ
லதுபுக லுரைகற் றார்.

இஃதைந்தடித்தா யீற்றடியொன் றொருசீர்குறைந்து வெண்பாவி னீற்றடிபோல முச்சீர்த்தா யாசிரியத்தளையா னொன்று மோசைச் சீரானிற்ற வோரொலிவெண்டுறை. திணை—பொதுவியல். துறை—பனுவல்வாழ்த்து. அலங்காரம்—சுவையினுள், கல்விபற்றிய பெருமிதம்.

41 வான்மா சறவழுத்தும் வாச மகிழ்த்தாமத்
தான்மா சறவுரைத்த தண்டமிழ்ப்பா வின்றேற்றே
வான்மாவி னென்றறிவா ரார்.

வாதியர்வாய் வீணடங்க வாசவகு ளாம்புயத்தா
ஞேதியநூ லொன்றிலையே னுத்தமநா ராயணனே
யாதிமுத லென்றறிவா ரார்.

கொந்தா ரிலஞ்சியந்தார்க் கோமான் குருகூருள்
வந்தா தரித்துரைத்த வண்டமிழ்ப்பா வொன்றிலையே
லந்தாம மென்றறிவா ரார்.

இவை வெண்டளைத்தாய்வந்த சிந்தியல்வெண்பா வொருபொருண்மேன் மூன்றடுக்கிவந்தமையால் வெள்ளொத்தாழிசை. (௧௩)

**வெண்பாவினம் முற்றும்.**

---

## ஆசிரியப்பா.

42 காமரு பன்மரங் கஞலிய பொதும்பர்
மாமரப் பணையின் மதுகர மிழைத்த
முதிர்கறங் தேற லொழுமலர் மூன்னுடு
கொளத்தகு மாபிற் குன்றவாண
வரைதனின் வரையா தொழுகலி னிருவிரு
மாறுபட் டொழுகிய மதியினி ராதலிற்
றிருமகிழ் மாறன் றிருவருட் கிலக்கா
யொழுகா தவருளத் தொன்று
மழுகா மதியின் மறுகுவல் யானே.

இது, நேரிசை யாசிரியப்பா. அலங்காரம்—உள்ளுறையுவமத்தினுள் வினையுவமப்போலி. பகுதி—பகற்குறி. துறை—வருத்தங்கூறி வரைவுகடாதல். (௧)

43 *இறைவறங் கூரா [1]வெறிபுனற் பொய்கைத்
துறைதொறுந் துவன்ற தோடவிழ் பன்மலர்

---

*மாறனலங்காரத்து இச்செய்யுளிற்கண்ட பாடபேதம் பின்வருமாறு:—
[1]வீர்ந்தண்பொய்கை.

மாந்துபு வயினிறை வெய்திய கவரி
யேக்தெழின் மாடத் தீன்றகன் றுள்ளிப்
படர்வுழிப் படர்வுழிப் பணைமூலைக் குறுங்கண்
மடைதிறந் துவளக மடுநிறைத் தொழுகும்
[1]பாற்றடி னியினோர் பழிதீர் பெடையின்
மாற்றருங் களியின் மகிழ்வர மூழ்கிய
பானிலாத் தெறுசிறைப் பவளவா யெகினந்
தணந்தயற் கழனிச் சாதிப் பெடையை
மணந்தத னனந்தலை மள்ளர்தா மூழத
நாற்றடி யதன்க ணறுந்தழை பதனழிந்
தூற்றெழுங் களங்க வுறுபுன லாடிப்
பண்டுதான் மரீஇய பானிறப் பெடையைக்
கண்டுதான் வளைக்குங் காமரு கடல்கெழு
கண்ணகன் ஞாலங் கண்டு[2]கண் களிப்பான்
விண்ணவர் [3]வியப்பவு மேதகு [4]படிமத்
தூரவணைத் [5]துயின்ற வாங்கத் தமுதி
னூரவுநீர்க் காவிரிக் குறு[6]வய லூர
புல்லேன் பொதுவுணின் மார்பெனச்
[7]சொல்லே னெம்மனனத் தொடர்புடை யானே.?

இதுவும் நேரிசையாசிரிப்பா. இதன் வேறுபாடுங் காண்க. இதுவும் வினையுவமப்போலி. திணை—மருதம். கைகோள்—கற்பு. பகுதி—பரத்தையிற் பிரிதல். திணையிற்றிணை—பெண்பாற்கூற்றுப் பெருந்திணை. துறை—இல்லவை நகுதல். (௨)

---

(மாறனலங்காரப் பாடம்.) [1]பாற்றிடி னியினையற் பழிதீர் பேடையைப், போற்றுறு களிப்பிற் புணர்ந்தவண் மூழ்கிப், புனிதமுற் றிருசிறை புலர்த்திய வோதிமம், தணந்தயற் கழனிச் சாதிப் பெடைகளை. [2]கண் ணயப்பான். [3]வியப்பான். [4]படிவத். [5]துயின்றரு ளரங்கத். [6]புனலூர. [7]சொல்லேன் புன்மனத் தொடர்புடை யேனே.

44 †குவளையு நீலமுந் தவளவொண் பதுமமும்
பூம்பொறி வண்டுளா ராம்பலுங் கஞலித்
திசைதிசை யோசனை தேங்கமழ் திவ்விய
வசைதீ ரந்தண் மயிலை வேலிப்
பொய்கையுட் டீந்தேன் பொதியவிழ் நறுமென்
செய்ய பொற் றாமரைத் திருமல ரதற்கு
மாந்தினர் மதிமயர் வுறுதலும் பாசடைக்
கரைசேர் வெள்ளிடைக் கலித் தெழு வனவாங்
கஞ்சா வினுக்குங் கஞ்சமென் றிடுகுறிப்
பெயர்மலி பான்மைப் பெரும்புன லூரன்
றெண்டிரைக் காவிரித் திருவரங் கேசன்
றொண்டர்தந் தொண்டர் தொடர்பினை யொரீஇப்
போதம் புறந்தரப் புரைதீர் தம்முயிர்க்
கேதங் கொள்ளுநர்க் கிடரிழைத் தகலா
தொல்லாப் புலன்வழி யுய்க்கும்
புல்லறி வினுட்குடி புகும்புன் மையனே.

என்பது பயவுவமப்போலி. திணையும் பகுதியு மிதுவு மது. துறை—உழையரியற்பழித்தல். பா—இதுவுமது. (௫)

---

†இச்செய்யுள் மாறனலங்காரத்திற் பின்வருமாறு காணப்படுகிறது.

குவளையுங் குமுதமுந் தவளவொண் பதுமமுந்
திசைதிசை யோசனை தேங்கமழ் திவ்விய
வசைதீ ரந்தண் மயிலை வேலிப்
பொய்கையுட் செவ்வியிற் பொதியவிழ் புனிதச்
செய்ய தாமரைத் தேறலை யளவளா
யுவட்டா தருந்தியு முருகிய சுரும்பதன்
கரைசேர் வெள்ளிடைக் கலித்தநீர் முள்ளியிற்
பாடவிழ்ந் தயற்சுரும் புளர்ந்துணப் பதனழி
பூநறா வுண்டின் புறுபுன லூரன்
தெண்டிரைக் காவிரித் திருவரங் கேசன்
றொண்டர்தந் தொண்டர் தொடர்பினை யொரீஇப்
போதம் புரந்தரப் புரைதீ ரின்னுயிர்க்
கேதங் கொள்ளுந ரிதயம்விட் டகலா
தொல்லாப் புலன்வழி யுய்க்கும்
புல்லறி வினுட்குடி புகும்புன் மையனே.

•45 * இனியதெள் [1]ளமுதா யெறிந்தரு கிரணப்
பனிமதி யகடுழப் பணைநெடும் பொங்கர்ப்
பூந்துணர் ததைஇய பொழிலெழி னள்ளிடை
யீர்ந்தண் கோட்டகத் தினமலர் முற்றிய[2]
பொன்னிதழ்த் தாமரைப் பொற்பொகுட் டாசனத்
தரசுவீற் றிருந்த வரிதுணர் பான்மைச்
சேவலோ டிமமொரு சிறைப்படு காவிற்
குருகுபு கொடுமுட் டாழைவெண் டோட்டினும்
வைகலு நசைஇவை குறுபுன லூரன்
பூமக ளிலைகுலாம் பூண்முலை [3]பொதுப்பத்
[4]தேம்வழி பசுந்துழாய்த் திருமணி மார்பன்
றென்னரங் கேசன் றிருவருட் கிலக்கா
[5]மூரனுடை யோர்கட் குறுதுணை யெனவா
ழில்லறம் பழிபிறங் காதிருந் தில்லி
னகனமர்ந் தாறு துறையுந்
[6]தகவது மிலாத தவறு ளோனே.

இதுவும் பயவுவமப்போலி. இதன் வேறுபாடுங் கண்டுகொள்க. பகுதி—இதுவுமது. துறை—தோழி யியற்பழித்தல். பா—இதுவுமது.

46 நீர்நிலை [7]முற்றலி னிழன்மலி சோலையுட்
கார்வழங் காத காலையுங் கவின்பெற
வேர்முதற் பழுத்து வியன்சினைப் பலவு
வளங்கெழு நாடவெம் மணிபுரை மாண்கவின்
புறந்தரு மாயினும் புனித[8]மொன் றின்று

---

*மாறனலங்காரத்துக் கண்ட பாடபேதம் வருமாறு:—- [1]ளமிர்தா யெறித்தெழு. [2]இவ்வடிக்குப் பின்னும் 'பூமகளிலைகுலாம்' என்று தொடங்கும் அடிக்கு முன்னும் பின்வருமடிகள் காணப்படுகின்றன. 'பொதியவிழ் தாமரைப் பொகுட் டாசனத்து, மதிநல னுறப்புணர் மாண்புடைப் பெடையொடும், வீற்றிருந் தின்புறு மேன்மையோ டிமமொரு, பாற்படு கரைசேர் பன்மாக் காவிற், குறுகுபு கொடுமுட் டாழைக் கூன்சினை, வெறுநிலத் தடர்தா விரித்தபா சடைமேற், றளிநறை மாந்துபு சார்பெடைக் குருகொடு, புணர்தலு நலனுறும் புனன்மலி யூரன்'. [3]முகடுழத். [4]தேமவிழ். [5]மூரனுடையோர்க ளுயிர்த்துணை. [6]தகவேது. [7]முற்றிய நிழன்மலி. [8]நின் னின்று.

லரவணைத் துயிலமர்ந் தருளரங் கேசன்
றூநீர்க் காவிரித் துறைபடிந் தல்லதை
யொல்லே மலரம ளியி னுறப்
புல்லேம் [1]பரத்தையர் பொதுவுநின் மார்பே.

என்பது மெய்யுவமப்போலி. பகுதி—இதுவுமது. துறை—அணைந்த வழியூடல். பா—இதுவுமது. (ரு)

47 உலகினீ ரழுவத் துறுசிறை [2]யவையி
னலைகொழித் [3]தறைதொறு மறைதொறு மொத்துண்
டழுங்கலு ரெய்திய [4]வாக்கைய தாகியுந்
தன்னால் வளர்க்கத் தகுசினை [5]யதன்கண்
மன்னு தரவின் [6]வயமீன் வைத்தகன்
வாங்கா துய்த்து வளர்புன லூரற்
கேவலிற் பிழையா வின்னிசைப் பாணர்
புதுவது வாய்வழி பிழைத்திவண் போதரு
மதுநினைந் தருவிருந் [7]தளித்தற் கந்தோ
மதுமகிழ் மார்பினன் வழுதிநன் னாட்டவர்
குடிமையைக் காய்திறன் குறிப்பது மின்றான்
[8]மாதோ மாணிழை மடவால்
யாதோ கறியின் கினிதமைப் பதுவே.

இதுவும் மெய்யுவமப்போலி. இதன்வேறுபாடுங் காண்க. பகுதி—இதுவுமது. துறை—பாணனைப்பழித்தல் பா—இதுவுமது. (௬)

48 பன்மலர் கஞலிய பழுமரச் சோலையுட்
டன்னிழ றுணையாத் தளிர்த்தமௌ வலின்மலர்
விரிகதிர் தெறுதலின் வெம்மையுற் றுணங்க
முட்புறக் குடக்கனி மூடப்பல வதனயற்
செங்கிடை மலர்களின் சிறப்பவு நிழற்று
மொண்புன லூரற் குறுபழி விளைக்கும்

(மாறனலங்காரப் பாடம்.) [1]பரத்தையர்ப் புணர்ந்தநின் மார்பே. [2]யதன்கண். [3]தலைதொறு மலைதொறு. [4]யாக்கைய. [5]யதன்மேன். [6]வளர்மீன். [7]தளித்திடற், [8]காதோ லுலவுகட் காரிகை.

யாமே திலமே திலமென வெங்கையர்[1]
மாமனைப் பயின் மரணிழை மடவரன்
மதாரிக் கண்ணாய் மதங்கனுற் றிலனாற்
புவிப்பா வலர்தம் புரவலன் மதுரா
கவிப்பா வலன்புகழ் கருணையங் கடலெனு
மதுமகிழ் மாலிகை மார்பினன் மயர்வறச்
சதுமறைப் பொருளாற் றருந்தமிழ் மறைத்துணி
வுரனுடை யோரி னுணர்ந்துயர் வறவுயர்
நலனுடை யிறைநிலை நவையறத் தெளிந்தோர்
பழிதீர் படிவம் பயின்றன ராகிக்
குணவத மிழந்த கூடா வொழுக்கின்
மனனக மலமிக மறுகுன
ரினமென லொன்று மிகழ்பொய்ம் மையனே.

என்பது உருவுவமப்போலி. பகுதி–இதுவமது. துறை—பாண னொடுவெகுளுதல். தோழிகூற்று. பா–இதுவுமது. (எ)

49 ஒன்றாய்ப் பரந்த வுறுவளி கறங்கலின்
மின்றாழ் பன்மீன் மிளிர்விசும் புழுசினை
சுவைமமலிக் தொசிதரத் துணர்த்தமென் பூமுகை
பொறிச்சுரும் புளர்தொறு மூளர்தொறும் பொதும்பருண்
மூறுக்குடைந் திழிதரூஉ மொய்ந்நறுந் தேறல்
பாந்துபண் முகத்தவாய்ப் பவளக் கொடியொடுங்
குரூஉக்கட் பரூஉத்தாட் குடம்புரை செருத்தற்
கயவாய் மேதி கட்கமு நீருண்
டுயவால் வைந்நுதித் தொடர்நெறி மருப்பிற்
புறக்காழ் வயிரப் பூங்கழை தடிந்துகு
நிறக்காழ் நித்தில நிரந்தரம் வான்றயல்

(மாறனலங்காரப் பாடம்.) [1] இவ்வடிக்குப்பின் பின்வருமாறு காணப்படு கின்றது. 'மாளிகை பயின்று மதங்கருற் றிலாரற், புவிப்பா வலர்புகழ் புரவலன் மதுரா, கவிப்பா வலன்புகழ் கருணையங் கடவுண், மதுமகிழ் மார்பினன் வண்குரு கூரன், சதுமறைப் பொருளாற் றருதமிழ் மறையினுண், மூதுமொழி யுணரா மூடம தடைந்த, மனன கமலமிக மறுகுன், ரினமென லொன்று மிகழ்பொய்ம் மையனே,'

வெள்ளிடை நிவந்த மேதகு கவலினை
யுள்ளுயிர்ப் பேடையை யுறையுளி னிருத்திப்
பாலுணீர் தெரித்துப் பருகுமொண் சேவ
லாலுநீர்ச் சிறைபுக் காய்ந்திரை கொணர்வலென்
றிகந்[1]தற விடைப்படிந் தெழுமயர் வுயிர்ப்பான்
வாலுக வைப்பென மறுகுபு குறுகிவீழ்ந்
தன்மையிற் றவக்குற் றச்சப் பார்வையிற்
புராதனப் பொய்கையுட் புகும்புன லூர
பொருவரு தாமரைப் புதல்வனைப் பயந்த
திருமறு மார்பினன் றிருவரங் கத்துட்
பொதுநலப் பெண்டிர் பொதுவுணின் மார்ப
மல்ல னீர்படிந் தல்லது
புல்லேந் தீண்டலெம் [2]பொன்னடிப் போதே.

இதுவு முருவுவமப்போலி. இதன் வேறுபாடுங் காண்க. பகுதி—இதுவுமது. துறை—அணைந்தவழியூடல். பா—இதுவுமது. (அ)

ஓங்கிய குரம்புசா ருவளக வயின்வயின்
வீங்கிய திணிதோண் மிடலுடை மள்ளர்
சுதைபெய் தாற்றலிற் சுடுமண் பன்முறை
ததைவுறப் படுத்த சால்பிற் றெண்ணீர்
வார்ந்துகு கவர்முழை மதகுபடர் குடுமியிற்
சேர்ந்தசை வறவிரு சிறகரு மொடுக்கி
மறைபுகு நோக்கின் மனப்பட் டிமையாற்
றுறைபுகு கயலினைச் சோர்புகண் டெடுத்துக்
கூர்வாய் வெண்சிறைக் குரண்ட மென்பெடைக்
கார்வா யெனவருத் தியினருத் துபுதுடித்
தயல்வீழ் வதனையாங் கற்றம் பார்த்து
மிச்சிலென் றறிந்தும் விழுநெறி யொரீஇ
நச்சியுண் புலவு நாற்றத் தோடுஞ்
செங்கால் வெள்ளுகிர்ச் சேவ லோதிம
மொருசிறை யிருந்து வோவாச் செவ்வி

(மாறனலங்காரப்பாடம்.) [1]தய விடைப். [2]பொன்னடிச் சுவடே.

யிருசிறைப் [1]பெடையுறை யெழின்மலர் குறுகு
நளிமலர்ப் பொய்கை நல்வய லூர
திருநெடு மாயன் றிருவரங் கத்துப்
பொருணசைப் பரத்தையர் பொறித்தநின் மார்பிற்
றனக்குறி யாநிற் றழூவுபு சிதைவுறின்
மனக்கிட ரிழைப்பது மன்றி
நினக்கிட ருறுமா னெருங்கலெம் மிடனே.

என்பது பிறப்புவமப்போலி, பகுதி—இதுவுமது. திணை—பெண்பாற் பெருந்திணை. துறை—பள்ளியிடத்தூடல். பா—இதுவுமது. (சு)

51 விசும்பு தூர்த்தெழு வியன்சினை மாத்தின்
பசும்புறத் தீங்கனி பரீஇ நுகர் கடுவன்
புரப்பவர் குறுகுபு புலம்புரீஇப் பொங்க
ரிரிந்தலம் போதரு மீர்ந்தண் சோலையுட்
புளிங்கறி வேட்டபுன் [2]றொழின்மையர்க் குறூஉ
பழிப்பின் றுகப் பாகுசெய் தட்ட
கோதறு மான்பாற் குழம்புபொற் கலத்தினுட்
பெய்திருந் [3]தாறிய பெற்றி போல
முடவடிப் பலவின் [4]முட்புறக் குடக்கனி
வேர்முதற் பழுத்து விரிந்தபொற் றீஞ்சுளை
பதனழி பான்மைப் பாய்புன லூர
நூற்கடற் பழகிய நுண்ணுணர் வுடையோ
ராற்றலிற் பரவுசீ ரரங்கனுக் கமைந்த
பாற்கடன் முற்றப் பருகுதற் கெழுந்த
பேராப் பெரும்பசி யாளர்தம் முன்ன
ராரா வள்ளத் தமுதமைப் பவர்போற்
சிறுவரை யின்பத் துறுதுய ரிழைத்தற்
கொத்த வீங்கியல் பன்றாற்
பரத்தையிற் பிரிதனின் பண்பா கும்மே.

இஃது "உள்ளுறை யுவம மேனை யுவமமெனத்—தள்ளா தாகுந் திணையுணர் வகையே" என்பதனால், புளிங்கறிவேட்ட புன்றொழின் மையர்க்குப் பாற்குழம்பு பொற்கலத்தினுட் பெய்திருந்தாறியபெற்றி

(மாறனலங்காரப்பாடம்.) [1]பேடை யெழின்மலர். [2]றொழிற்றன் மையர்க்குத், [3]தாறும் பெற்றி யேய்ப்ப. [4]முதிர்பொற் குடக்கனி.

போல வென்று புலப்படக்கூறு மேனையுவமம் புலப்படக்கூறாத உள்ளுறையுவமத்தினைத் தருகின்ற கருப்பொருட்குச் சிறப்புக்கொடுத் ததனுட் கூடிநின்றது. "விரிகதிர் மண்டிலம் வியல்விசும் பூர்தர" வென்னு மருதக்கலியுள்ளும், "நனிவிரைந் தளித்தலி னகுபவண் முகம்போல" என்ற வினையுவமந் தாமரைமலர் பனிவாரத் தலைவிடுமென்ற வுள்ளுறையுவமத்தைத் தருகின்ற கருப்பொருட்குச் சிறப்புக்கொடுத்து நின்றது. அன்றியும், "உடனுறை யுவமஞ் சுட்டுநகை சிறப்பெனக்—கெடலரு மரபி னுள்ளுறை யைந்தே" என்ற பொருளியற்சூத்திரத்தாற் சிறப்பென்ற வுள்ளுறை. இவ்வேனையுவமம் உள்ளுறையுவமத்திற்குச் சிறப்புக்கொடுத்து உள்ளுறையுவமம்போலத் திணையுணர்தலைத் தள்ளாது நின்றவாறு காண்க. இது பரத்தையிற் புணர்ந்துவந்த தலைவன்வரவு கண்டூடிய காமக்கிழத்தி, ஊடியவாறுகண்டு சார்ந்த தலைவனுடனூடநீர் கின்றாள் கூறியது. இதனுள், தலைவி, தோழி, காமக்கிழத்தி, உழையரென்போர்கூற்று வந்தன. ஒழிந்தோர்கூற்றும் வந்தவழிக் கண்டு கொள்க. இவை பத்தும் நேரிசையாசிரியப்பா. (௧0)

52 திரைகொழித் துயிர்ப்பன திகழ்வலம் புரியே
வலம்புரி யுயிர்ப்பன வாணித் திலமே
நித்தில முயிர்ப்பன நெடுவெண் ணிலவே
நிலவுற வடர்பிணி நெகிழ்வன குமுதங்
குமுதமங் குயிர்ப்பன குளிர்தெண் ணறையே
நறைநதி
சுழித்தெடுத் தனவாய்த் துறைதொறுந் துறைதொறுந்
தெழித்துயிர்ப் பனவுங் குறுமணித் திரளே
மணித்திரள்
பரிதிபோன் றிரவினைப் பகற்செய் வனவா
லருகுநின் றலர்வன வம்புய மலரே
மலரினை
அளகமர் புறவினு ளான்புன லுணமரீஇக்
குளகென மாந்துபு குழக்கன் றுள்ளலும்
உள்ளிப்
படர்வுழிப் படர்வுழிப் பணைமுலைத் துளைவழிக்
குடமடித் தீம்பால் குதித்திரு நிலத்துற

அப்பால்
ஆறிரண் டெனப்பகுத் தலைத்தெழு நனைந்தலை
வீறுட னெக்கர்கூர் வெண்மணல் வெள்ளிடை
நள்ளிடை
மதியக டுரிஞ்சிய மழைதவழ் பொதும்பர்ப்
புதியமென் மலரினைப் பூத்த காயா
வைகலுஞ்
சொரிதரு நாண்மலர் துவன்றுயர் நீளிடை
விரிவன வாகி விழுமிதின் விளங்கும்
அத்திறம்
பாலா ழியினடுப் பரிமள வாவணை
மேலாய் விழித்துயில் விமலனைப் பொருவருஞ்
சங்கணித்
துறைபயில் பொருநைச் சொற்றமிழ்க் குருகூ
ரிறைவநின் பொன்னடி யிறைஞ்சுகே னின்னும்
நானிலத் தொருபிறப் புனதா நன்னகர்
மானிடப் பிறவியி லாணுரு வெனலா
மதுமுத லியபெறற் கரியன வெளிமையிற்
பொதுவற வெய்திநிற் புகழ்புல வனெனுப்
பருமணி குயிற்றிய பசும்பொற் கும்பத்
தருண்மலி மஞ்சன மாடிய காலையி
னுத்தம வீரவா டையுமுறுக் கொலியலு
மத்தக வடைந்தவ ணலங்கரித் தெழுதிருக்
கைத்தலச் சேவையு முத்திரைக் காமுஞ்
சித்திர நாபியிற் செறித்தகைத் தலமும்
புத்தமு தனையசெந் தமிழ்மறைப் பொருள்புணர்
முத்தமுந் திருப்பவ ளமுங்குறு மூரலு
மறுத்துடைத் தொளிர்முழு மதிமுகச் சோதியு
முறுப்புடைத் திருக்குழை யுருவமும் புருவமும்
நயனமாந் தருள்புரி நயனமும் புயமு
மயன்முதன் மதித்தபத் மாசனத் திருப்பும்
வருணா பரண மார்பமு மவுலியு

முகுளா திணைவிழி முழுதுறு காட்சியிற்
கூடிய வுணர்வொடுங் குழைந்தெழி னுவாற்
பாடிநின் றுடியும் பண்ணுள் கழிந்தபின்
பொருவில்பே ரின்பமும் புணர்வான்
ஒருவரந் திருவுள மூவந்தருள் கெனவே.

இது நாற்பத்தைந்தடியா யிடையிடை தனிச்சொற்பெற்றுவந்த நேரிசையாசிரியப்பா. என்னை? "சீர்கூ றுத னோடிக் குறித்தே" என்பதனாலறிக. (இ-ள்) திணை—பாடாண். துறை—கடவுள்வணக்கம். (கக)

53 கார்கதழ் பரிநெடுந் தேரின்மூந் தியதாற்
காகோ தரவணைக் கண்டுயி னெடுமால்
கார்வா னத்து கு மாரியும் வலவா
காரிகை மையுண் கண்கலுழ் மாரியுங்
காமனைங் கணைமலர் பொழிநறை மாரியுங்
காட்சிமூந் நீரிற் கலந்திவ ணெதிர்கொளுங்
காலுருள் கொடாதறை யறிந்தொரு கணவரை
காணுதி யவணுறக் கடாவுதி யிரதங்
காவலுன் னுயிர்க்கினி யதுவே
காவலின் றெனதுயி ருறுதுயர்க் கடற்கே.

இதுவும் நேரிசையாசிரியப்பா. இஃ தடிதோறும் முதலெழுத்தொன்றிவரத் தொடுத்தமையா னடிமோனைத் தொடை. பகுதி—பொருள்வயிற்பிரிதல். துறை—பாகனொடு கூறல். (கஉ)

54 அணங்கனு ளுறையுளென் பதுந்தா மரையே
சுணங்குலா மிளமுலை துணைத்தா மரையே
யொளிர்முக மரங்கனுந் தியந்தா மரையே
தெளிதரின் மதர்விழி செந்தா மரையே
தொடிக்கையுந் துணைத்தா மரையே
யடிச்சுவ டணியிழா யலர்தா மரையே.

இஃ. தடிதோறும் எழுத்தானுஞ் சொல்லானும் ஒன்றிவரத் தொடுத்தமையா னடியியைபுத்தொடை. பகுதி—சேட்படை. துறை—அவயவங்கூறல். (கங)

55 அராவணை மிசைத்துயி லமர்ந்தரு ளரங்கனைக்
காசல மூலமென் றழைத்தருள் கண்ணனை
முராரியை யிரணியன் மதுகையை முறுக்கிய
நராரியை நயந்திறைஞ் சினரே
தராதலம் விரும்புமந் தாமமெய் துவரே.

இஃது அடிதோறும் இரண்டாமெழுத் தொன்றிவரத்தொடுத்தமையான் அடியெதுகைத்தொடை. (கச)

56 செந்தா மரைமகள் புணர்திரு வரங்கன்
கார்க்கடல் வண்ணன் கண்ணனெம் பெருமான்
வாமனன் கேசவன் மாதவன் சீதரன்
நெடியோ னீரடி யெனநில மளந்தோன்
அடியிணை நறுமல ரது தூய்
முடிமிசை தரிப்பவர் முத்தரா குவரே.

இஃது அடிதோறுஞ் சொல்லானும் பொருளானும் முரணத்தொடுத்தமையா னடிமுரண்டொடை. (கரு)

57 ஆஅ னிரைகாத் தருளரங் கேச
னீஇ னிறக்கரி நிழன்மருப் பொடித்தோன்
பூஉ மகள்புணர் புயலடித் துணையிற்
றோஒ மலரிடு மவர்வினை
போஒ மொருநொடி யினிற்புறக் கொடுத்தே.

இஃது அடியளபெடைத் தொடை. (கசு)

58 நாவே [1]விழுமிய நலனுடை முதற்பொருள்
பொருளுரை யாய்தரிற் புகலமற் றுளதே
யுளதே வண்டிமி ருறுமல ரோடை
யோடை மால்வரை மூலமென் றுரைசெய
வோடை மால்வரை மூலமென் றுரைசெய
வுரைவிசைத் தடங்கா வொல்லையிற் குறுகுபு
புனிற்று வெனவருள் புரிந்திடர் செகுத்த

(மாறனலங்காரப்பாடம்.) [1]யுரனுறு நலமிகு.

வறைபுன லரங்கத் தமுதினை யன்றியு
மதித்தொரு [1]முதலினை மகிழ்ந்து
துதிப்பது முளதோ சுரர்பெரு நாவே.

இதனுள் நான்கந்தாதித்தொடையும் வந்தமையா னந்தாதித்தொடை. (கள)

59 திடனே திடனே திடனே திடனே
யிறைதிரு வரங்க னென்பது
மறைமுத லரியென வாழ்த்திய துறினே.

இஃது தோரடிமுழுது மொருசொல்லேவரத் தொடுத்தமையா னிரட்டைத்தொடை. (கஅ)

60 மாறனை யேத்தார் விழுதீ நரகிற்
சுடுநெறி யினியார் செல்வர்
விடலைநீ கங்கு லாறியே குதியே.

இது மோனைமுதலாய முழுது மொவ்வாதுவந்த செந்தொடை. நேரிசையாசிரியப்பா. (கக)

தொடைவிகற்பம் வருமாறு:—

61 இரவினி லிருள்கடி முழுமதி வதன
மிதுசிறு பிறைநுத லிவைமுரி புருவமி
னிமணி நிரையென வணிநகை யிலகிய
திணைவிழி யிருகய லிணைபணி மொழிநறை
யிளமுலை மரைமுகை யிடுகிடை யிலையா
லிலைவயி றிமிழ்வளை களமெனு மிருநில
மிமையவ ரிறைவனொ டிரதிம னிருடிகண்
மனமரு டகைமட வரலெனு மமுதினொ
டளிமுரன் மதுமகி ழணிவர முனிவனை
யளவிய நலனிவ ணனமதனு
மவனெனை யெதிருரை யினனனு பமனே

இதனுள் இணைமோனைமுதலிய விகற்பமேழும்வந்தமை காண்க. ()

(மாறனலங்காரப் பாடம்.) [1]முதலையே.

62 அறமுத லரியெனு மவனே பரனே
யணுவினு ளவனே செகமுணர் பரனே
மனனே கரிசொல வருபுயல் பரனே
யமுதரு ளினனே யவனே பரனே
நிலனே வானே நிறைமுதல் பரனே
வலனே தரிதிகி ரியனே பரனே
யயனே சிவனே யயனே பரனே
யின்னண மமைதா ணிறையரங் கேசனைப்
பொன்னடி பணிபவர் புகுபதி
பன்னருஞ் சிறப்பிற் பரந்தா மமதே.

இதனு ளிணையியைபுமுதலாயின வேறுவிகற்பமும் வந்தமை காண்க. (உக)

63 முற்றுண னுற்பவ மாதலின் முழுமுதல்
பொற்கம லத்திரு முற்ற முயங்கிய
வற்புத ஞான னெனவுற் றபி
னற்றது பற்றெனி னுற்றது வீடுயிர்
செற்றது மன்னுறி லற்றிறை பற்றே
பற்றிலன் முற்றி லடங்கென நற்றமிழ்
கற்றவன் மற்றிரு பற்றறு கொற்றவ
னுத்தம ஞானமுத் திரைக்கையு முகமும்
பத்திமை யாற்றெரி சிப்பவர்
நித்தர்வந் தெதிர்கொள முத்தரா குவரே.

இஃது திணையெதுகைமுதலாய விகற்ப மேழும்வந்த நேரிசையாசிரியப்பா. (உஉ)

64 அறிவில ருணர்வுள ரெனுமவ ரளவினி
லருவமொ டொளிர்திரு வுருவம துடையனை
யெளியனை யடியவர்க் கேனையோர்க் கரியனைக்
கனவினு நனவினு மறிதுயிற் கண்ணும்
வெண்சங் காழி செம்மணிப் பொன்முடி
காலையு மாலையுங் கண்டுநன் பகலினு

மின்புறத் துன்பமற் றிம்பரோ [1]டும்பரு
ணறவார் மலர்மக ணாதனை
மறவா தவர்பதம் [2]வாழ்த்து மென்னாவே.

இஃ திணைமுரண் முதலாகிய வேழுவிகற்பமும் முறையே வந்தமையான் முரண்விகற்பத்தொடை. (உரு)

65 நாஅல் வாஅய் மூலமென் றழைப்பச்
சாஅல் புணர்ந்து தாஅன் விரைதலின்
காஅ லெனநிமிர் கலுழனிற் போஒ
யாஅழ் நீஇர் வாஅழ் முதலையி
னாஅ ருயிருண் கோஒ மாஅன்
றாஅ தாஅர் பூஉமகள் சேஎர்
மோஒ கூஉர் மாஅ மாஅ
லெனவொரு காலுரை நாவே
நமையொரு காலமு நண்ணா னமனே.

இஃ திணையளபெடை முதலாகிய வேழுவிகற்பமு முறையானே வந்தமையா னளபெடை விகற்பத்தொடை. ஆகத் தொடைவிகற்பம் முப்பத்தைந்தும் வந்த இவையு மோர் பதின்மூன்றும் நேரிசை யாசிரியப்பா. (உச)

66 கடுவே கடலெனக் [3]கருநெடுங் கண்ணிணை
காமனுங் காமுறுங் காட்சிய காண்முகங்
கிள்ளையின் [4]கிளவியுங் கிளைத்தகைக் கிளையுடைக்
கீரமுங் கீர்த்திக் கீரமுங் கீரே
குவடுடைக் குளிர்பொற் குன்றே குவிமுலை
கூர்புதற் கூன்சிலை கூற்றுயிர் கூட்டுணுங்
கெடலருங் கெழுதகை கெழுமுபு கெழீஇய
கேகயங் கேளொடுங் கேடறுங் கேழியல்
கைபுனை கைக்கிளை கைக்கிணை கைத்துணை
கொண்டலுட் கொண்டன கொண்டையுங் கொடியிடை
கோடூரக் கோவலர் கோற்றொடி கோமான்

(மாறனலங்காரப் பாடம்.) [1]டும்பர், [2]வழுத்துமென், [3]கார்தடங், [4]கிளையும்,

கௌரவ கௌசிகன் கௌசிகங் கௌத்துவ
மணியெனக் கொண்டுமுன் மனவீ டளித்தோன்
கண்ணகன் குறுங்குடிக் கனவரை
மண்ணகத் துறையுளாய் வளர்நில மகட்கே.

இது ககரவருக்க முற்றுமோனைத் தொடை. இதுவும் நேரிசை யாசிரியப்பா. (௨௫)

67 தேமகிழ் மார்பன் றடரியஞ் சிலம்பிற்
றாமரை மலருங்
காமரு குவளையுங்
கோங் கரும் பிணையும்
பூங் கரும் பிணையுந்
தாமலி பூங்கொடி தருமனக் களியே.

இஃ தாறடித்தாய் முதலடியு மீற்றடியு மளவடித்தா யிடையிற் குறளடி யிரண்டுஞ் சிந்தடி யிரண்டுமாக வந்த இணைக்குறளாசிரியப்பா. துறை—காட்சி. அலங்காரம்—உருவகவாய்பாட்டான்வந்த வுடனிலைச் சிலேடை. (௨௬)

68 படுதிரைப் பௌவமும் பானலம் போதும்
விடுசுடர்க் கதிர்வா விரிமரை மலருங்
கடுவுங் கணையும்
வடுவும் பிணையு
மடுபோர்க் கூற்றின் கணிச்சியுங்
கொடுவே லிணையுங் குறிக்கொளுந்
தடுமா றுண்கட் டாழ்குழ லாயத்
தொடுவாழ் வெய்திட முபகிட தப்பொரு
ணடுவாய்த் தமிழ்மறை நவின்றருண் மாற
னெடுமால் வரைச்சர் தனத்தண் ணிழலே.

இதுவும் பத்தடித்தாய் முதலிரண்டடியு மளவடித்தாகியு மீற்றினில் நாலடியு மளவடித்தாகியு மிடையிற் குறளடி யிரண்டாகியுஞ் சிந்தடி யிரண்டாகியும் வந்த இணைக்குறளாசிரியப்பா. அலங்காரம்—பல பொருளுவமை. பகுதி—பாங்கற்கூட்டம். துறை—இயல்பிடங்கூறல்.()

69 *வெண்டிரைப் புனற்கா விரியயல் விரிந்த
வண்டிமிர் பாசடைக் குவளைமென் பனிமலர்
முட்டாட் டாமரை முறுக்குடை நாண்மல
ராக்கெறி வள்ளித ழாம்பற் போதுடன்
மேய்தரு கயவாய் மேதிகன் றுள்ளுபு
பணைமுலை சுரந்து பனிற்றுபாற் றடினி
நெட்டிலை யரம்பையி னீடுபொற் கூன்கனி
முடவடிப் பலவின் முட்புறக் குடக்கனி
நெடுவெண் டிங்க ணடுமறுத் துடைத்திடுஞ்
செந்தளிர்ப் பொங்கர் மாவின் றீங்கனி

---

* இச்செய்யுள், மாறனலங்காரத்திற் பின்வருமாறு காணப்படுகிறது.

வெண்டிரைப் புனலரு வியலயல் வயல்விரி
வண்டிமிர் பாசடைக் குவளைமென் பனிமலர்
புறக்கொடை மதிதாப் பொதியவிழ்ந் ததுபோய்ச்
சிறக்கணித் தனவாஞ் சேயிதழ்க் குமுத
முட்டாட் டாமரை முறுக்குடை நாண்மலர்
கட்கா மருகடை வாய்வழிந் திழிதா
மேய்தரு கயவாய் மேதிகன் றுள்ளுபு
பணைமுலை சுரந்து பனித்தபாற் றடினி
நெடுவெண் டிங்க ணிறைமறுத் துடைத்தொளிர்
செந்தளிர்ப் பூஞ்சினைத் தேமாத் துகுகனி
முடப்பரி யரைப்பலா முட்புறக் குடக்கனி
புறக்காழ் மரகதப் பூக மிடற்றி
னிறக்காழ் திரண்டு நீண்டுதிர் பழுக்காய்
நெட்டிலை யரம்பையி னீடுபொற் கூன்கனி
புதையிரு டீர்இக்கதிர் பொழிநவ மணிக்குவை
சுழித்தெடுத் திரைத்தவாய்த் தூமலர் பலகொடு
பாற்கடல் பொன்னியுட் படிதிரு வுருவங்
காண்பதின் முன்னிய காட்சியொன் றெனலாய்த்
துறைதொறுந் துறைதொறுந் துழனியின் விளக்குந்
திருவரங் கேசனைத் திருமறு மார்பனை
மனத்துற நினைந்தும் வாழ்த்தியும் வணங்குந
ரெக்குலத் தெவரே யாயினு
மக்குணத் தவர்க்கடி யேனடி யேனே. (77)

சுழித்தெழு திரைக்கையிற் றாமலர் பலகொடு
பாற்கடல் பொன்னியுட் படிதிரு வுருவங்
காண்பதின் முன்னிய காமர் காட்சியிற்
றுறைதொறுந் துறைதொறுந் துழனியின் வளைக்குந்
திருவரங் கேசனைத் திருமறு மார்பனை
வாழ்த்தியும் வணங்கியு மனத்துற நினைக்குந
*ரெக்குலத் தவரே யாயினு
மக்குலத் தவர்க்கடி யேனடி யேனே.

இது, நிலைமண்டிலவாசிரியம். (இதனுள்) அடைசினை முதலென முறைமுன்று மயங்காமை வந்த வண்ணச் சினைச்சொல். அலங்காரம்— (இது) தற்குறிப்பேற்றவுவமை. திணை—பாடாண். துறை—நகர்வாழ்த்து.

70 வான்றிக ழுதய மதிமழை முகிற்கீழ்
மீன்றிரி தமர வெண்டிரை வைப்பினு
ளருவியஞ் சுவண வருவரை ஞாங்கர்
வாழ்திற மெனவாய் வதனமு மோதியுங்
காழ்புனை திதலைமென் கதிர்முலைச் சுவடு
முறுப்பமைந் தோவிய முயிர்படைத் தியங்குத
லறியா தாங்க ணணிவரைச் சாரலிற்
செறியா வுடைந்ததென் றிண்ணிய நிறையே.

இதுவும் நிலைமண்டிலவாசிரியப்பா. பகுதி — பாங்கற்கூட்டம். துறை—உற்றதுரைத்தல். அலங்காரம்—நிரனிரையுவமை. (உ௬)

71 மன்னோர் நின்றனன் வடமலை மிசையே
முன்னே சிலர்தொழ முயல்வது கண்டே
பொன்னே யலவிடு வதுமொரு பூவே
யென்னே சிலரெவ னரசெய் துமதே.

இஃ தடிமறிமண்டிலவாசிரியப்பா. திணை—பாடாண். துறை—கடவுள்வாழ்த்து. அலங்காரம்—சுவையினு ளிழிவுபற்றிய வழுகை. ()

* இது முச்சீரடியாயிருத்தலால் 'இது நிலைமண்டிலவாசிரியம்' என்னும் குறிப்புடன் பொருந்தாதிருத்தல் கவனிக்கத்தக்கது.

72 பதிகளி னதிபதி திருமகள் பதியே
துதிகளி னதிபதி தமிழ்மறைத் துதியே
மதிகளி னதிபதி மாறனுண் மதியே
நதிகளி னதிபதி வாசுர நதியே.

இதுவும் அடிமறிமண்டிலவாசிரியப்பா. திணையுந் துறையு மிதுவு மது. அலங்காரம்—சாரம். (௩௧)

73 தண்ணறுங் கடப்பந் தார்ச்செவ் வேளெனு
மொண்மையுங் காந்தியு முயர்குடிப் பிறப்பும்
வாய்மையுங் குறையிரந் தொழுகலும் வண்மையுந்
தூய்மையும் வைகலுந் தொடர்பிடை விடாமையு மல்லாற்
கன்னலின் வளமலி கழனிநன் னாடும்
பொன்னெடுங் குன்றமும் புரவல புரப்பினுங்
கலைபயின் மாறன் காரிதந் தருள்கார்
மலைவளர் மயிலனை யாட்கு
முலைவிலை யாமென மொழிதலொல் லாவே.

இது நேரிசை யாசிரியப்பா. இதனுள், 'தூய்மையும் வைகலுந் தொடர்பிடை விடாமையு மல்லா'லென நாலாமடி யைஞ்சீரடியாய்வந்தது. இதன் வேறுபாடுங் கண்டுகொள்க. இது அலங்காரம்—விரியுவமை. பகுதி—வரைபொருட்பிரிதல். துறை—அருவிலைசெப்பல். (௩௨)

74 கண்ணன் வானோர் பெம்மான் கார்போல்
வண்ணன் மோகூர் வைகும் மாயோன்
றண்ணந் தாமந் தாரான்
விண்ணின் றிங்கட் கென்செய் வேனே.

இது, நேரொன்றாசிரியத்தளையான்வந்த நேரிசையாசிரியப்பா. திணை—பெண்பாற்கூற்றுக் கைக்கிளை. துறை—கையறல். அலங்காரம்—அவயவியுவமை. (௩௩)

75 மறைநவின் மறைமொழி வகைமயர் வறவுறு
முறைதரு தமிழ்மறை மொழிமகிழ் முனிவனை
யினிறையென வுணர்பவ ரெவ்வா
றுலைறபதி மலர்மக ளுறைபதி யுலகே.

இது நிரையொன்றாசிரியத்தளையான்வந்த நேரிசையாசிரியப்பா. (இது) திணை—பொதுவியல். துறை—பொருண்மொழிக்காஞ்சி. அலங்காரம்—சுவையினுள், கல்விபற்றிய பெருமிதம்.* (௩௪)

---

## ஆசிரியப்பாவினம்.

76 கஞ்சத் திருமால் கழல்பரவு மாறனார்
செஞ்சொற் றிருவாய் மொழியுணர்ந்த சீலத்தார்
வஞ்சப் பிறவி வலைப்பட் டுழலாரே.

ஆயத் தகுமா லடிபரவு மாறனார்
நேயத் திருவாய் மொழியுணர்ந்த ஞானத்தார்
மாயப் பிறவி வலைப்பட் டுழலாரே.

தந்திக் கருண்மால்பொற் றாள்பரவு மாறனார்
சிந்தித் துரைத்ததிரு வாய்மொழிதேர் சிற்குணத்தார்
வந்திப் பிறவி வலைப்பட் டுழலாரே.

இவை மூன்றடியாய்த் தம்மு ளளவொத்து ஒருபொருண்மேன் மூன்றடுக்கிவந்தமையா லாசிரியத்தாழிசை. இவுதுந் திணையுந் துறையும் அலங்காரமு மது. (க)

77 இருநில மூவடி யெனவளர்ந் தோங்கிய
திருமறு மார்பனைச் சிந்தையுள் வைப்பவ
ரொருபொழு தினுமிட ருறுவதொன் றிலரே.

இது, தனியே வந்த ஆசிரியத்தாழிசை. இதுவும் திணையும் துறையும் அலங்காரமும் அது. (உ)

---

*இதன்பின், "இனி, கோயிற்கலம்பகத்துள், 'கரைபொரு தொழுகும் காவிரி யாறே' என்னு மகவல்போல இடையிடை தனிச்சொற்பெற்று முதலே அடி—மு—அந்தாதிப்பதாக வோரகவல் பாடவேணும். இரண்டாவது இவ்விரண்டடியாய் எழும் எட்டுத்தான மாகி ௬—ந் தானம் ஆறடியாய் நேரிசை யாசிரியப்பாவாய்ப் பாடவேணும். ஆசிரியப்பா முற்றும்" என்று ஏட்டுப்பிரதியிற் காணப்படுகிறது.

78 அலைபயில்பாற் கடல்கடைந்தன் றமுதளித்த திருவரங்கத்
தமுதை யேத்துங்
கலைபயில்வண் டமிழ்க்குருகூர் மகிழ்மாறன் வரையனையீர்
கட்ப டாந்தீர்
முலையெனுமான் மதக்களிற்றின் முன்னிறுத்தி வினையேனைக்
கொலைபயில்வேல் விழிபுதைத்த தறநிலையோ வறநிலையோ
கூறு வீரே.

இது, நான்கடியாய் ஈற்றயலடிகுறைந்து அல்லாத அடி ஒத்துவந்த ஆசிரியத்துறை. பகுதி—பாங்கற்கூட்டம். துறை—நாணிக் கண் புதைக்கு வருந்தல். அலங்காரம்—சங்கிரணம். (௩)

79 திரைத்திருப்பாற் கடல்கடைந்து தெள்ளமுதும் பருக்களித்த
திருமால் செய்கை
யுரைத்திருப்பா ரிடத்திழைத்த வூழ்வினைசென் றணுகாதென்
றுரைப்ப தொன்றே
வுரைத்திருப்பா ரிடத்திழைத்த வூழ்வினைசென் றணுகாமை
வரைத்திருப்பா ரிடத்திழைத்த வல்வினையும் வரைத்தவர்பான்
மருவா தன்றே.

இஃது ஈற்றயலடிகுறைந் திடைமடக்காய்வந்த ஆசிரியத்துறை. திணை—பாடாண் துறை—கடவுள்வாழ்த்து. அலங்காரம்—கல்விபற்றிய பெருமிதம். (௪)

80 வண்ண மகிழ்மாறன் மால்வரைமா னனைத்துட்
கண்ணென் றிகல்புரிவன் கூற்றினையேன் வைத்தானென்
கண்ணு ளானுங்
கண்ணென் றிகல்புரிவன் கூற்றினைவைத் தாலயலா
ருண்ணின் றுயிர்கவர்வ துள்ளா தெனவெளிவிட்டா
ருரானுள் ளாரே.

இது நான்கடியாய் இடையிடைகுறைந் திடைமடக்காய்வந்த ஆசிரியத்துறை. பகுதி—இயற்கை. துறை—தகையணங்குறுத்தல். அலங்காரம்—அவயவியுருவகம். (௫)

81 நெடுவான் கலைவயிரத் திழைத்தபருப் பதக்குடுமி நீவ நாளு
மோடுவான் மதியகட்டி னூறுபிணையைப் பிணையெனக்கொண் [டும்பர் வாவக்
கோடுவார்ந்திழிதருதெள்ளமுதவருவியிற்குழுமிக்கொடியனாரே
யாடுவார்மைந்தருமுண்டுண்பதுமதத்தெள்ளமுதேபவர்களாளும்.

இஃது அறுசீர்க் கழிநெடிலடியான்வந்த ஆசிரியவிருத்தம். திணை—பாடாண். துறை—நாடுவாழ்த்து. அலங்காரம்—திரிவதிசயம். (௬)

82 படியின்மேற் படிந்தகதிர்ப் படைமீது கிளர்களையாம் பனிவண் டாடிக்
கடியுணீ லமுநறுமென் கமலமுஞ்சாய்த் துடன்கிடந்த காட்சி கூறி
னடியுமா கமுந்தழுவிக் கொழுநரொடுங் கலவியினி லழுந்தி யோர்தம்
முடியுமே தகவுடைநன் முகத்துறவைத் துடன்றுயிலு முறையே [போலும்.

இதுவும் அது. துறையும் அது. அலங்காரம்—ஒருவயிற்போலி. ()

83 நிறந்தழைவான் கதிருணங்க வங்குரித்தங் குடன்வளர்ந்த
நீர்மைத் தாகுந்
திறந்தழைசெங் கமலமுமிந் தீவரமு முடனுணங்குஞ்
செயலுந் தீந்தேன்
வறந்தரவண் டினந்துறந்த செய்கையுநீ ரவருறவின்
மாண்புங் கள்ளுநண்
டறந்தவறித் திரிகளிய ருறவினிழி வையுமுணர்த்து
மமைதித் தாமே.

பாவினம்—இதுவுமது. துறையும் அது. அலங்காரம்—நிதரிசனம். (௮)

84 காழகிற் பொழிலுஞ் சந்தனப் பொழிலுங்
கமழ்நறுஞ் சண்பகப் பொழிலுங்
கோழரைக் கமுகு நாளிகே ரமும்பொற்
கோங்கும்வேங் கையுமலர்க் குருந்து

மாழையந் சுளேமுட் புறக்கனிப் பலவு
மாவுநா கமும்பணை மருதுந்
தாழையு மகிழும் வாழையுங் கரும்புந்
தனித்தனி தழைத்த [1]வெம் மருங்கும்.

இது, எழுசீர்க் கழிநெடிலடியான்வந்த ஆசிரியவிருத்தம். (௯)

85 மரவமுங் [2]கடமும் பனசமும் பிடவும்
வடமுமா தவியுமா துளமுங்
குரவமு மிலவுந் திலகமும் விளவுங்
கொன்றையுஞ் செருந்தியுங் குமிழு
மரசுநா வலுந்தான் றியுமரீ தகியு
மாமல கமுநாந் தமுமாம்
[3]பிரமுமே லமுமார் மாமும்வே முமுஞ்சம்
பீரமுந் துவன்றசால் பினவே.

இதுவு மது. (௧0)

86 வள்ளேயங் கொடியு முல்லேயும் விரைமென்
மயிலேயு மிருபுடை மயங்கிக்
கொள்ளேவண் டினம்பாண் முரன்றறு பதத்தாற்
குடைந்துதே மதுமடை திறக்கு
முள்ளுடைக் கொழுந்தாட் கமலமும் விரவி
முறுக்கவிழ் குவளேயு மிரவின்
விள்ளிதழ்க் குமுதத் தொகுதியும் பருதி
விளேக்கும்வா விகள்பல பலவே.

இதுவு மது. இவை மூன்றும் நாடுவாழ்த்து (த்துறை). அலங்காரம்—இடத்தன்மை. (௧௧)

---

(மாறனலங்காரப் பாடம்) [1]தெழ்மருங்கும். [2]கடம்பும் பனசமு மருதும். [3]பிரமுமே லமுஞ்சன் பகமும்வே முமுஞ்சம் பீரமுந் தழைந்துள வொருசார்.

87 தாழிதடங் கடலகடா யொலிக்குந் தண்ணந்
தளிதருதிம் பாறயிராய்த் தலைப்பெய் *கோவாப்
பாழிநெடுங் கிரியெனுமந் தரமத் தாகப்
படநாகம் வடமாகப் பரந்த தேவர்
வாழியிருந் தெள்ளமுதங் கடைநா ளாழ்ந்த
வயிரவரை யிணைக்கமட வடிவா யேந்து
மாழிபுனைந் தெழுதடக்கைப் பெம்மான் றொண்டர்க்
கடியவரா நிலைமையரென் னடிக ளாவார்.

இது, எண்சீர்க் கழிநெடிலடியான்வந்த ஆசிரிய விருத்தம். துறை—கடவுள்வாழ்த்து. அலங்காரம்—வினைத்தன்மை. (௧௨)

88 வெற்றானொன் றிசையாது சாவா மூவா
விழுமருந் †தொண்டுறக்கமெய்வானோரைச்
செற்றானொன் றிசைகனக னிங்கு ளானோ
சிறுவவென மதுகைநர சிங்க மாகிப்
பொற்றூணெட் டகடுகிழித் தவன்ற னாகம்
போழ்ந்துகிரா லளைந்துசூடர்ப் புண்ணீர் மாலை
கற்றூணம் பொருவுதிர டிண்டோள் வேய்ந்த
கருணைவரைக் கடிமைசெயுங் காட்சி யாரே.

இதுவும் எண்சீர்க் கழிநெடிலடியான்வந்த ஆசிரியவிருத்தம். இதுவும் துறை—கடவுள்வாழ்த்து. அலங்காரம்—அவயவவுவமை. (௧௩)

89 தேனிலங்கும் பைந்தாம மாலை மார்பிற்
றெசரதனன் மகவாகித் திண்கா னேமி
வானிலங்கொ ளேழுமரா மரமும் வாலி
மார்பகமு மிலங்கேசன் மவுலி பத்து
நானிலத்தன் றிழிதரவோர் வாளி தூவி
நன்னுதலா ளுடன்கூடி யிளவ லென்போன்

---

*கோவாம் என்றிருப்பிற் பொருள் பொருந்துவதாம்.

† 'தொன்றுண்டுறக்க' வென்றிருப்பிற் பொருந்துவதாகும்.

ருனிலங்கா புரம்புரப்பக் களித்த வென்றித்
தனுராமன் றனக்கடிமை தழைந்து ளாரே.

இதுவும் எண்சீர்க்கழிநெடிலடியான்வந்த ஆசிரியவிருத்தம். துறை-இதுவும் கடவுள்வாழ்த்து. அலங்காரம்—வீரம்பற்றிய பெருமிதம். ()

90 உடைமணியுங் கிண்கிணியுங் கறங்கா வண்ண
மொதுக்கிமழ வொன்றுடனு ளற்ற நோக்கி
யிடைமகளிர் மனையிடைபுக் கதன்பொற் றேண்மீ
தேறிநிமிர்ந் திடக்கையுறி பிடியா மற்றைப்
புடைமலர்க்கை கொடுவெண்ணை தொடுவுண் டந்தப்
புதல்வனுக்கும் பகுந்தருத்திச் சிங்க நோக்கிற்
கடைநயன மணிவாயில் பற்ற நின்ற
காட்சிநினைந் தாடுவார் பாடுவாரே.

இதுவு மது. அலங்காரம்—வினைத்தன்மை. (௧௫)*

91 பொலந்தளிர் மிளிர்தரப் பொறையுயிர்த் துலவா
நலந்தழைகோங் கரும்பரும்பி நறைததும்பு நறுநெய்தன்
மலர்ந்துளபொற் புடைக்கமல மலர்ந்தெதிர்ந்தோர் மம்மர்நோய்
புலந்தனவாஞ் செழுங்காந்தள் பொருவில்கொழுங் குமிழினொடு
மலர்ந்தளிதாய் மணமல்கி யமைந்தபொனங் கொடிமன்னோ.

இஃ தைந்தடித்தரவு.

நான்முகத்தோன் றனக்கமைத்த நவையறுபொற் பினவாகும்
வான்முகத்தும் வளர்பொழிற்கண் வளர்வதுதா னுளதென்றோர்
நூன்முகத்தும் வியப்புறவே நுவல்வதுமொன் றிலதாயும்;

வெண்டிரைப்பாற் கடல்பயந்த விழுமியதெள் ளமுதருந்து
மண்டர்தம ணியப்புவனத் தமைந்துளவைந் தருவகத்துங்
கண்டனனென் றொருபனுவல் கழறியதொன் றிலதாயும்;

* ஏட்டுப்பிரதியில் இதனையடுத்து, 'பொலந்தளிர்' என்ற முதற்குறிப்புடைய செய்யுளும் அதுபற்றியகுறிப்பும் எழுதப்பட்டு ௧௬ என்று எண்கொடுக்கப்பட்டுளதாயினும், (௧௫) என்பதன்பின் ஆசிரியப்பாவினம் முற்றும் என்று வரிப்பிளந்தெழுதப்பட்டிருக்கிறது.

தத்துதிரைக் கடல்வளைத்த தரணியினு ளிடையாக
வைத்தவிரு சுடர்வலஞ்செய் வடவரையின் மருங்காய
வுத்தரதிக் கினும்பனுவ லுரைத்துளதொன் றிலதாயும்;

எங்கோன்,

இவற்றுள், முன்னைய மூன்றும் மூன்றடித்தாழிசை. ஏனையது தனிச்சொல்.

அருட்புயன் மாற னருவியந் துடரிப்
பொருப்பினுட் கண்டவற் புதத்தான்
மருட்கையின் வயத்ததாய் மகிழுமென் மனனே.

இது, மூன்றடியாய்வந்த நேரிசையாசிரியப்பாவாலிற்ற சுரிதகம்.

இது, அகநிலையொத்தாழிசைக் கலிப்பா. பகுதி—இயற்கை. துறை—காட்சி. அலங்காரம் உருவகவாய்பாட்டால் வந்த உடனிலைச் சிலேடை.

---

## கலிப்பா.

92 நீலாலங் குளிறுதிரை கெழுகடன்மூற் றகன்ஞாலத்
தாலால மிசைபவள வருவரையுங் கருவரையுந்
[1]தமவெனவாங் கமைத்ததொழிற் றன்மையுட னொருதலையா
யெமதெமதென் றெதிருநரின் னுயிர்செகுத்தீத் திருநோக்கிற்
கடைசிவந்து [2]வரிபரந்து கவின்பெறுவார் குழைபோழ்ந்த
வடிபுரைமாண் [3]மதர்மழைக்கண் மதிபுரைவா ணுறுநுதா அல்;

இஃ தாறடித் தரவு.

இடர்தழுவுங் குனிசிலைக்கை யிகன்மறவர் [4]தொடுகணையோ
டென்றெழிலொண் சுடர்வடிவேற் றுணவாத லொருதலையாற்
றொடர்ந்தெழுநின் றமரேற்சென் பகமாறன் றுணையடிசேர்
திடர்[5]தழுவுந் ததியரெனத் தெறலருநன் கருளுவனே;

---

(மாறனலங்காரப் பாடம்) [1]தமிதமியென் னதுவெனலாந் தவலருமாண் டொழிற்றன்மை. [2]கருமையவாய்க். [3]மதர்மலர்க்கண். [4]கொடுங்கணையோ டென்றெழிலென். [5]தழுவு ததியரெனத் தெருளுறநன்.

வாட்டானைத் துறுமறவர் வயிரவழற்[1] பிழம்பெறிகட்
கோட்டானை யுடன்வரிலென் கூளிலவே லவர்மார்பிற்
றீட்டானை வினையளிப்ப னுமரேற்றிவ் வியனுளபத்
தோட்டானைத் தொழுமாறன் றெண்டரினன் கருளுவனே;

குளிர்மதிவா னகடுரிஞ்சுங் கொடித்தேரின் குழுவினொடு
மொளிதிகழ்வன் படைமறவ[2] ருடன்றெழில்வைவ் நுதிவேலாற்
களிபயில்வெங் தொழில்புரிவ னுமரேல்வண் கருணைச
[3]னளிபயினன் மகிழ்மாற னடியரினன் கருளுவனே;

இவை மூன்றும் நான்கடியாய் ஒருபொருண்மேல் அடுக்கிவந்த தாழிசை.

எனவாங்கு,

[தனிச்சொல்]

காணுதி காணுதி கனலிதெறும் கெழினுங்
தாணுவி னிலதவ றினுந்தவ றுவுரை
குன்றுசூழ் கூர்ம்பரற் [4]கொடுநெறி
யொன்றுநீ யழுங்களு ருறலே குதியே.

இது நான்கடியாய் நேரிசையாசிரியப்பாவினு லிற்ற சுரிதகம்.

இது, தரவு தாழிசை தனிச்சொல் சுரிதகமென்னும் நான்குறுப் பினு மிழுக்கின்றாய்வந்த ஒத்தாழிசைக் கலிப்பா; என்னை? "ஒத்தா ழிசைக்கலி கலிவெண் பாட்டே, கொச்சக முறமொடு கலிநால் வகைத்தே', "அவற்றுள், ஒத்தா ழிசைக்கலி யிருவகைத் தாகும்", "இடைநிலைப் பாட்டே தரவுபோக் கடையென, நடையபின் றொழுகு மொன்றென மொழிப"* எனபவற்றான் உணர்க. இதனை யாப்பருங் கலக் காரிகையார் நேரிசையொத்தாழிசைக் கலிப்பா வென்ப. அலங் காரம்—சுவையினுட் பெருமிதம். என்னை? "கல்வி தறுக ணிசைமை கொடையெனச், சொல்லப் பட்ட பெருமித நான்கே"† என்றாராகலின். பகுதி—உடன்போக்கு. துறை—அடலெடுத்துரைத்தல். (க)

---

(மாறனலங்காரப் பாடம்.) [1]பிழம்புகுகட். [2]ருடங்கெழின். [3]னளிதிகழ்தே மகிழ்மாற. [4]கொடுநெறிக், கொன்று.

*தொல். பொருள். செய்யுளியல் 130—132.

†தொல். பொருள். மெய்ப்பாட்டியல் 9.

93 அண்டாண்ட பகிரண்ட முழுவதுமீன் றகத்தடக்கிக்
கொண்டபெரும் பாழினுக்கு ஞூங்காதாய்க் குளிறுதிரை
மண்டுபெரும் புனல்விரசைக் கப்புறத்தாய் மதிலந்தோய்
தொண்டரினம் பேரின்பத் துறைபயிலந் தாமத்து
ளருணவிளங் கதிருதய மலகிறந்தோன் றியதொன்றாத்
திருமணிமண் டபத்தினுளிந் திரையுடன்வீற் றிருந்துளாய்;

இஃ தாறடித்தரவு.

இலகியவான் சுடர்விளக்கி னெழுதருபல் பந்தமெனு
வுலகொருநான் கினுமதன்க ணொருநால்வ ரெனும்படித்தாய்
நிலவலயத் தடைவடைவே நிரைத்துளதீ விருமூன்றுஞ்
சுலவியபாற் கடலாவிற் றுயிலுவந்த வொருமுதலாய்;

மீனாவ தாரமுதன் மேதினிமேல் வருகற்கி
தானாகி யுனக்குமொரு தந்தைதா யுளவெனலா
யூனார்பைக் குரம்பையினோ டுகந்தோறு முகந்தோறு
மானாதிங் கமைபருவத் தங்குமமை பவனாகி;

ஏழ்வகைத்தாய்நால்வகைத்தோற்றத்திசைந்துமிழைத்துளதம்
மூழ்வகைத்தா யலம்போது முயிர்கடொறும் பிரியாது
வாழ்வகைத்தாய்ப் புனல்சொரிந்து மலர்தூவி வழிபடுதற்
காழ்கடற்பா ரடியவர்பா லங்கங்கங் கமர்ந்துளாய்;

இவை மூன்றும் நான்கடியா யொருவிகற்பத்தான் வந்த தாழிசை.

பேதமையா விறந்துபிறந் துழல்வனெனப் பேதுறு
மூதறிவா ரழியாத முதல்வனெனத் தெளிந்துளாய்;

சாபத்தா விழுக்குறாத் தலைமையாய் சாபமடைந்
தாபத்தா யினர்சரணை றடைதருமாங் கருள்புரிவாய்;

இவையிரண்டும் ஈரடியிரண்டட்போதரங்கம். (இவை பேரெண்.)

வேதனுமுற் றுணர்வலெனி லறிவரிய மேன்மையாய்;
ஆதரவுற் றிடுமெளியர்க் கறிவெளிய பான்மையாய்;
நினைபவர்தா நினைவுறுமவ் வுருவமதாய் வெளிநிற்பாய்;
அனைவருங்கண் டால்வியப்புற் றுசிபகர்ந் தெழுபொற்பாய்;

இவைநான்கும் நாற்சீரோரடி நாலம்போதரங்கம். இவை அளவெண்.

திகிரியை யுயர்வலந் தரித்துளாய்;
திகழ்வரி வளையிடம் பரித்துளாய்;
புகர்முக மதமலை சொலச்செல்வாய்;
பொருமுத லையினுயிர் செலக்கொல்வாய்;
இரணியன் மார்பது பிளந்துளாய்;
இருநில மூவடி யளந்துளாய்;
அரணிய லார்கலி யடைத்துளாய்;
அதனிடை யேழ்மதிள் புடைத்துளாய்;

இவை யெட்டும் முச்சீரோரடி யிடையெண்.

தேனிமிர் துளபத்தாய்;
செனனம துளபத்தாய்;
ஈனா திடமெய்தாய்;
எழுமெழு மாமெய்தாய்;
அலகையி னுயிர்கொன்றாய்;
அறனல தருகொன்றாய்;
உலகம துறுதுப்பாய்;
உரலிடை யடர்துப்பாய்;
மறைமொழி யினுமெட்டாய்;
வரைபொரு ளுரையெட்டாய்;
உறைதயி ரதுகட்டாய்;
உரைபுகழ் பலகட்டாய்;
அகன்மலை கவிகையுளாய்;
அழல்பெரு கவிகையுளாய்;
சகடம துதைமைந்தாய்;
தகவின ருளமைந்தாய்;

இவை பதினாறும் இருசீரோரடிச் சிற்றெண்.

எனவாங்கு,

[தனிச்சொல்.]

பாத்துவ முதலாப் பரந்துள வைந்தாய்
வரத்துடன் மூவுரு வாகிய வாத
திருக்குரு கூரனின் றிருவடி வழுத்துது
மெங்கோன் றிருமகிழ் மார்பின னியற்றமி
ழூழிதோ றூழியெவ் வுலகினும்
வாழிய தாக வளர்க்கநீ யெனவே.

இஃது நாறடித்தாய் நேரிசையாசிரியப்பாவினாலிற்ற சுரிதகம்.

இது, நாலு தாழிசை எண் தனிச்சொல் சுரிதகமெனும் ஐந்துறுப்பினால் வந்த வண்ணகவொத்தாழிசைக்கலிப்பா. என்னை? 'ஏனையொன்றே,

தேவர்ப் பராஅ முன்னிலைக் கண்ணே', 'அதுவே, வண்ணக மொருபோ கெனவிரு வகைத்தே', 'வண்ணகந்தானே, தரவே தாழிசை யெண்ணே வாரமென், றந்நால் வகையிற் றோன்று மென்ப', 'தரவேதானும், நான்கு மாறு மெட்டு மென்ற, நேரடி பற்றிய நிலைமைத் தாகும்', 'ஒத்து மூன்றாகு மொத்தா ழிசையே'. (ஒத்த தாழிசையை ஒத்தாழிசை யென்றது வினைத்தொகை.), 'அடக்கியல் வாரந் தரவொ டொக்கும்' முதற்றொடை சுருங்குமன் னெண்ணே', 'எண்ணிடை யொழிதலேதை யின்றே, சின்ன மில்லாக் காலையான'* என்பவற்றான் உணர்க. இவ்வாறு வரும் வண்ணகவொத்தாழிசையினுள் இருசீரோரடிச் சின்னம் பதினாறும் ஒருசீரோரடியாய் வருவனவும் உள. அவை:—'உறைபதியி னுடனயனை யுந்திப்பாற் படைத்தோயு, மறைகடல்சூழ் நிலமுதலா யனைத்துலகும் புரப்போயும்'† என்னும் வண்ணகவொத்தாழிசையினுள் மூன்றடித்தாழிசை மூன்றும், 'வானுநீ; நிலனுநீ; மதியுநீ; விதியுநீ; தேனுநீ; அமிர்துநீ; திருவுநீ; உருவுநீ; அன்புநீ; அருளுநீ; ஆதிநீ; அந்தநீ; இன்பநீ; துன்பநீ; இன்மைநீ; உண்மைநீ;' என ஒரு சீர்ச் சின்னம் பதினாறுமாக வந்தவாறு காண்க. 'கெடலரு மாமுனிவர்'‡ என்னுங் கலியுள் முச்சீரோரடி யிடையெண்ணினையும் இருசீரோரடிச் சிற்றெண்ணினையும் ஒருசாராசிரியர் இருசீரோரடியாகவும் ஒருசீராகவும் அளபெழாம லமைத்தவாறுங் கண்டுகொள்க. இவ்வாறு வரும் வண்ணகவொத்தாழிசையினை ஒருசாராசிரியர் அம்போதரங்கவொத்தாழிசையென்று கூறுமாறும் உணர்க. (உ)

இனி வண்ணகமென்பது அராகமென வுரைத்து அவ்வுறுப்புடையன வண்ணக வொத்தாழிசை யெனவுஞ் சொல்வர். வண்ணித்துப் புகழ்தலால் வண்ணகமாயிற்றென்ப துணராதே. அன்றியும், எல்லா வாசிரியருஞ் செய்த வழிநூற்குத் தொல்காப்பியம் முதனூலாதலின் அவரொடு மாறுகொளக்கூறலாம் அது. ஆதலால் அது தொல்காப்பியர் நோக்கமன்றென வுணர்க. அதற்குஞ் செய்யுள் வருமாறு :—

---

* தொல். பொருள். செய்யுளியல், 138--142, 144—146.

† டை. டை. டை. நச். 146 ம் சூத்திரவுரைபார்க்க.

‡ டை. டை. டை. டை. டை.

94 பூமாது நிழன்மணிப்பூண் பொதியவிழ்பொன் னிதழ்ப்புனிதத்
தேமாலை நறுங்களபஞ் செறிமார்பத் திடைமுயங்க
வளப்பரிதாம் பகிரண்டத் தப்புறமு மகத்தடக்கி
யுலப்பிலிளங் கதிருதயத் தொளிகிளர்பே ருருவாயு
நன்னரங்கத் தனுக்கடொறு நயந்தனுவா கியுமெழில்கூர்
தென்னரங்கத் தரவணைமேற் [1]றெளிந்திருகண் வளர்ந்துளாய்;

இஃ தாறடித் தரவு.

ஒருசுடராஞ் சொருபமுட னுருபமமைந் தொருசுடரோ
டிருசுடராய்க் குணமொருமூன் றெனலாகி முறைமுறையே
படைப்பதையு மழிப்பதையும் புறம்போக்கிப் பழிபிறங்கா
திடைப்படுகா வலை[2]நினதென் றெடுத்ததெவ னருளுதியே;

நின்றனவா [3]யியங்கினவாய் நீடியபல் லுருவளித்தோன்
பொன்றியநா ளொழிந்தபெரும் புனற்படிந்த வுயிர்களைநீ
யெம்மானே திருவுதரத் திருத்தியகா வற்கவற்றாற்
கைம்மாறங் கெவனோ[4]முன் கைக்கொண்ட தருளுதியே;

புறம்பயின்ற வினைவழிசார் போக்குவர வினும்பிரியா
[5]தறம்பயின்ற தனுவுளதே லதற்கவற்றை யெடுத்தனையா
யுண்ணீர்மை யற்றனமாய்ந் துழலாகிற் புகுவதுறீஇக்
கண்ணீர்கொண் டகன்றகலாக் காவலெவ னருளுதியே;

இவை மூன்றும் ஒருபொருண்மேல மூன்றடுக்கி நான்கடித்தாய்
இரண்டுவிகற்பத்தான் வந்த தாழிசை.

தாணியு ளவரொடு மூரணிய பெருவிற
லிரணியன் வானொடு மரணற விகலினை;

ஒருபது சிரமுட னிருபது கரமுள
னிருதனை யுயர்சிசை பொருகணை சிதறினை;

மறையவ ரிறையவ ருறைவயின் வடுவுரை
பறையவ னுயிர்புகு மறைகழ லிணையினை;

(மாறனலங்காரப் பாடம்.) [1]செற்றிருகண். [2]யெனதென். [3]யியங்குனவாய் நீடியபல் லுருவமைத்தோன். [4]நீ. [5]தறம்புரிவ தனுவுளவே.

முதலையி னிடருறு மதமலை மடுவினு
ளுதவுக வெனுமுரை யதனொடு முதவினை ;

இவை நான்கும் அராகம் ; என்னை ? 'உருட்டு வண்ண மராகந் தொடுக்கும்'* என்பதனாற் குறிலிணைந் துருட்டிவந்த துணர்க.

வஞ்சனையோர் வடிவெடுத்து மாதுலனு மறைபயின்ற
கஞ்சனைக்கொன் றரகேசன் கடும்பொறையைத் தவிர்த்தனையே ;
குருகுலத்தார் நூற்றுவரைக் கூற்றுவனுட் டினிலிருத்தித்
தருமன்முத லவர்க்கவனி தனியாளக் கொடுத்தனையே ;

இவை நாற்சீரடி யிரண்டடிம்போதரங்கம். இவை பேரெண்.

கழிபெருங்கற் பினளாடை கழியாம லைந்தனையே ;
வழிபடுந்து தனுமாகி மடக்கோலை சுமந்தனையே ;
ததிபாண்டன் றனக்கழியாத் தமனியநா டளித்தனையே ;
விதிகாண்டற் குலப்பில்பல வேடமவை கொண்டனையே ;

இவை நான்கும் நற்சீ ரோரடி நாலம்போதரங்கம் ; அளவெண். அற்றேல், நாற்சீ ரீரடியிரண்டம்போதரங்கத்தொடும் இவற்றிடை வேற்றுமையாதோவெனின் எழுத்து முதலா வீண்டிய வடியிற் குறித்த பொருளை முடியநாட்டல் வேற்றுமை என்னை ? 'எழுத்து முதலா வீண்டிய வடியிற், குறித்த பொருளை முடிய நாட்டல், யாப்பென மொழிப யாப்பறி புலவர்'† என்பதனானுணர்க. இந்நோக்கம் மேல்வரும் இடையெண் சிற்றெண்ணிற்கும் ஒக்கும்.

தாடகை யுடலுயிர் போக்கினை ;
தாபதன் மனதிடர் நீக்கினை ;
நீடகலிகைபழி தீர்த்தனை ;
நேசமுள் ளவனொடு சேர்த்தனை ;
வில்லினை மிதிலையில் வளைத்தனை ;
மெல்லிய விளமுலை திளைத்தனை ;

*தொல். பொருள். செய். 233.
† ஷை. ஷை. ஷை. 78.

வல்லா வடல்கெட நடித்தனை,
மருதினை முதலொடு [1]முடித்தனை

இவையெட்டும் மூச்சீ ரோரடி யெட்டம்போதரங்கம்; இவை இடையெண்.

உறித்தயிர்கட் டுண்டனையே;
உரலிடைகட் டுண்டனையே;
மறித்துநிரை காத்தனையே;
வழங்கினையைங் காத்தனையே;
குடநடமுன் பாடினையே;
குழலினிற்பண் பாடினையே;
படர்சகடம் பொடித்தனையே;
பகட்டுமருப் பொடித்தனையே;
நாவலன்பின் னடந்தனையே;
நடித்தனை[2]மன் னடந்தனையே;
கோவலரில் லிறுத்தனையே;
கோள்விடையே றிறுத்தனையே;
புள்ளினைவா யிடந்தனையே;
புரந்தனைபா ரிடந்தனையே;
தெள்ளமுதங் கடைந்தனையே;
தேவருளங் கடைந்தனையே;

இவை பதினாறும் இருசீரோரடிச் சிற்றெண். அம்போதரங்கமெனினும் எண்ணெனினும் ஒக்கும்.

இதனுள், பேரெண் இரண்டும் அளவெண் நான்கும் இடையெண் எட்டும் சிற்றெண் பதினாறும் அடைவே குறைவின்றி வந்தன.

எனவாங்கு,

[தனிச்சொல்]

இனையதன் மையவா மெண்ணருங் குணத்தி
னினைவருங் காவ னிகழ்த்தினை யதனா
னின்னது கருணையு நீயு
மன்னிய திருவுடன் வாழிவா ழியவே.

இது நான்கடியாய் நேரிசையாசிரியப்பாவினுலிற்ற சுரிதகம்.

---

(மாறனலங்காரப்பாடம்) [1]மொடித்தனை. [2]மென்.

இதனுள் ஆறுறுப்புங் குறைவின்றிவந்தமை கண்டுகொள்க. இது யாப்பருங்கலக்காரிகை நோக்கம். என்னை ? 'அவற்றொடு முடுகிய லடியுடை யாராக, மடுப்பது வண்ணக வொத்தா ழிசையே' என்பதனு னும், 'அசையடி முன்ன ராரகம்வந் தெல்லா வுறுப்பு முண்டேல், வசையறு வண்ணக வொத்தா ழிசைக்கலி'* என்பதனானும் உணர்க.

இவையிரண்டும் திணை—பாடாண். துறை—முன்னது கடவுள் வணக்கம். பனுவல்வாழ்த்தெனினு மாம்; பின்னது கடவுள்வாழ்த்து. இரண்டும் அலங்காரம்—வாழ்த்து. (௩)

95 ஆளாய் மதுரகவி யாதரித்த பூங்கமலத்
தாளான் மகிழ்மாறன் றந்த தமிழ்மறைப்பாக்
கேளா தவரே யிருசெவியுங் கெட்டாரே ;

மாதர முலைப்பா லருந்தா வரோதயனுந்
தாதார் மகிழ்மாறன் றந்த தமிழ்மறைப்பா
வோதா தவரே யுரையறியா வூமர்களே ;

புள்ளிப் பொறிவண் டிமிர்பூம் பொழிற்குருகூர்
வள்ளன் மகிழ்மாறன் வடித்த தமிழ்மறைப்பா
வுள்ளத் துணரா தவரே யுணர்விலரே.

புலவீர்,

பழுதற மாறன் பகர்தமிழ் கையா
லெழுதிய வேட்டி னிமலர் சூட்டித்
தொழுததன் வாசந் துற்றியவ் வேட்டைச்
செறிப்பதே சென்னி மற்றைய
பொறித்தலை யென்னப் புனைபொய்த் தலையே.

இது தாவின்றாகித் தாழிசைபெற்ற கொச்சக வொருபோகு. என்னை ? 'ஒருபோ கியற்கையு மிருவகைத் தாகும்', 'கொச்சக வொரு போ கப்போ தரங்கமென், றொப்ப நாடி யுணர்தல் வேண்டும்',† 'தாவின றாகித் தாழிசை பெற்றுந், தாழிசை யின்றித் தரவுடைத் தாகியு, மெண்ணிடை யிட்டுச் சின்னங் குன்றியு, மடக்கிய லின்றி யடிநிமிர்ந்

*யாப். காரிகை. செய். 11. † தொல். பொருள். செய். 147, 148.

தொழுகியும், யாப்பினும் பொருளினும் வேற்றுமை யுடையது, கொச்சக வொருபோ காகு மென்ப'* என்பவற்று னுணர்க. இது தனிச்சொல் லும் சுரிதகமுமின்றித் தாழிசைதாமேயும் வரும். (௪)

96 புண்டரிக மடலவிழ்பொற் பொகுட்டினில்வாழ் திருமகளுந்
தெண்டிரைசூழ் புவிமகளுந் திருத்தகவாழ்ந் தெழில்பெருகும்
வண்டிமிர்பூம் புனற்பொன்னி மதிளரங்கன் றிருவடியுட்
கொண்டவர்க ளினிப்பிறவிக் கருக்குழியுட் குறுகாரே.

இது, தனிச்சொல்லுஞ் சுரிதகமு மின்றித் தன்றளையான்வந்த தாழிசையின்றித் தாவுடைத்தாய கொச்சகவொருபோகு. திணை—பாடாண். துறை கடவுள்வாழ்த்து. அலங்காரமும் வாழ்த்து. இதற்கு யாப்பருங்கலக்காரிகையார் தாவுகொச்சகமென்று பெயர்கூறுப. (௫)

97 மாந்தளிர் போன்மேனி மையுண் கருங்கயற்கட்
பாந்தளின் மேதக்க பைபோன் றகலல்குல்
வாய்ந்தவணை மென்றோண் மடவா னல்லா
யழுங்கனுஞ் சீறா ரகன்மலைக் கெம்பூர்ச்
செழும்பசும்பொன் கோடு செய்துயர் குன்றந்
திணிதாய்ப் புடைத்தெழுநின் றெண்ணணித் திலக்கா
முணிபூண் முலைபோன் றணித்து.

தேமகிழ் மாளிகைச் செம்மலின் சென்னியும்
பூமகள் காதலன் பொற்றாட் கமலமும்
போன்றணித் தன்றியும் பொய்தீர் வசிட்டனும்
வான்றனில் வைகும் வடமீ னெனலாக்
திருந்திய கற்புடைச் சேயிழை யென்னு
மருந்ததி யும்போன் றணித்து.

இது, தாழிசையின்றித் தாழிசையொடுபட்ட தாவிலக்கணத்திற் றிரிந்துவந்த தாவிணைக் கொச்சகவொருபோகு; என்னை? 'எழுசீ ரிறுதி யாசிரியங் கலியே', 'வெண்பா வியலினும் பண்புற முடியும்'† என்னுஞ் சூத்திரங்களுடன் மாறுபடாது, எழுத்து முதலா வீண்டிய வடியிற் குறித்த பொருளை முடிய நாட்டுந் தாவு தாவிணை வந்து அதன்பின்ன ரீற்றயலடி முச்சீரா யெழுசீராயினும் நேரிசையாசிரியச்சுரிதகமாதல்,

*தொல். பொருள். செய். 149. †தொல். பொருள். செய். ஏ௬. ஏஏ.

ஈற்றடி முச்சீராய் ஈற்றயலடி நாற்சீராய் மேனின்று மெழுசீரானிறும் வெள்ளைச்சுரிதகமாதலின்றி, வெண்டளைதட்டு வெள்ளோசைதழீஇ வெண்பாவியலாற் றாவிரண்டும் ஈற்றடிக்கண் முச்சீரா னிற்றமையா னென்றுணர்க. இதற்கு இங்ஙனம் தாவிரட்டிப்பதே பெரும்பான்மை யென்றுணர்க. தாவிரட்டியாது வருவதூஉம் வந்தவழிக் கண்டுகொள்க. "செவ்வீய திவ்விய"* வென்னும் பாலைக்கலியும் இதுவென்றறிக. (இது) பகுதி—இயற்கை. துறை—இடமணித்துக்கூறி வற்புறுத்தல். அலங்காரம்—ஒருபொருட்குப் பலபொருளுவமை. (௬)

98 கற்பனைமேற் கொண்டொழுகுங் கடைப்பிடியார் வயிற்றிருநாண்
பொற்புறுமாற் றலிற்பொறித்த பொருவருசெவ் வணிநோக்கித்
தற்பொதிவாட் டுறந்தகெழு தகைத்தாய புனலூரா
னிற்புகலால் வெஞ்சினநஞ் செனக்கூர்த்த மருளுக்க
முற்பலந்தெள் ளமிர்துயிர்த்தற் [1]றெளிகிளர்சீர் பயின்றனவே.

அஃதன்றால்,

அருகணிங் கெமையாண் டருண்மகிழ் மாறன்
புனல்வறங் கூராப் பொருநையுட் [2]புத்தேட்
டினகரோ தயத்திற் செவ்விபெற் றலர்ந்த
[3]தண்மலர் மரைபுரை தகைத்தா
மொண்ணுத லரிவை [4]யொளிர்திரு முகமே.

இது, தன்றளைத்தாய்த் தாவு, தனிச்சொல், சுரிதகம் என்னும் மூன்றுறுப்பால்வந்தது. இதனை யாப்பருங்கலக்காரிகையார் தாவு கொச்சகக்கலிப்பா வென்ப. இதனது வேறுபாடுங் காண்க. (இது) பகுதி-பரத்தையிற்பிரிதல். துறை-முகமலர்ச்சிகூறல். அலங்காரம்—அற்புதவுவமை. அற்று உவமவுருபு. (௭)

99 இமிழ்திரையார் கலியமுவத் திரும்புனன்மீ மிசைபொடிக்குங்
குமிழ்புரைபுன் னிலைப்புலவுக் குரம்பையின்வீ வினையோர்க்துங்
கடிகைதாங் கழிதொறூஉங் கழிபெருங்கா மருசெவ்வி
யொடிகையா யுயங்கிழைமுப் புடனுறனூன் முகத்துணர்ந்து

---

*'செவ்வீய தீவிய' என்பது கலித்தொகையிற்கண்ட பாடம். (பாலை.18. (மாறனலங்காரப் பாடம்). [1]றெளிதிகழ். [2]புரைதீர் தினகரோதயத்திற். [3]தண்மலர் புரைதகைத்தாகு. [4]புலைகைவாண் முகமே.

மமிழ்தினும்வான் சுவைபயப்ப வருண்மாறன் மயர்வறக்கூர்
தமிழ்மறையின் றுறைமூழ்கித் தத்துவந்தான் றலைப்பெற்றே
யொருதலைபற் றினர்க்கிகல்செய் குனருணர்வி னிலைநீத்த
பொருள்வேட்ட கெழுதகைமைப் புரவலநின் போக்குறீஇ
மருள்வேட்டா டிறத்தியான் வடிப்பனபற் பலவம்ம;

தாளாண்மை யகத்துறீஇத் தகவிலர்க்குந் தக்கார்க்கும்
வேளாண்மை செய்ததற்பின வெள்வளைதா மிறைதுறப்பத்
தொய்யிரு ணைமென்றோட் டிணைதுறப்பப் புதுமதிபோன்
மையில்வாண் முகமாழ்கி மணிமாமை யதுதுறப்பக்
கறைகெழுவே லெனமிளிர்ந்து கள்ளுயிர்க்குங் கழுநீரி
னுறைமலிநோ யுழந்திருகண் ணொருங்குதுயில் வினைதுறப்ப
நன்னுதலார்க் கணியாய நலம்புரிநா ணுளந்துறப்ப
வின்னுயிர்தன் னிலைதுறக்கு மிவைமன்ற வின்னுங்கேள்;

அஃதன்றால்

புகழும் வாய்மையும் பொச்சாப் பின்மையு
நிகழுந் தோற்றமு நின்னிலை துறப்பக்
கற்கடங் கடந்து சேறற்
குற்றதொன் றுனுறு வனவுலப் பிலவே.

இது, தன்றளைத்தாகித் தாவிரட்டித்துத் தாவு தனிச்சொற் சுரிதகமென்னு மூன்றுறுப்பால் வந்தது. இதனை யாப்பருங்கலக்காரிகையார் தரவிணைக் கொச்சகக் கலிப்பா வென்ப. இதனது வேறுபாடுங் காண்க. (இது) பகுதி—பொருள்வயிற்பிரிதல். துறை—செலவழுங்குவித்தல். அலங்காரம்—இதனுள் பலவயினு முவமை வந்ததாயினும் முன்னவிலக்கினுள், தலைமைவிலக்கு. (௮)

100 தாதிவர் தண்டுழாய் தனையவிழ் வகுளமதாய்
மேதகு புயநான்கும் விழுமியதோ ரிரண்டாகி
மாதவனென் றருமறையும் வாழ்த்துந் திருநாமம்
பூதலத்தோர் மாறனெனப் புகழ்க்குருகூ ரமர்ந்துளாய்;

இது நான்கடித்தரவு.

ஈசனென்று நீயென்று மென்னுதற்கோர் பாவினையா
னீசனிறை யொன்றுமிலே னென்றென்று நீகிழ்த்து
மேதசமதின் றெண்ணொன் றறியேன் மொழிந்தருளே;

மத்துறுவெண் ணெய்க்காக மாதவனீ கட்டுண்ட
தெத்திறமென் றுறுதிங்க ளெம்பிரான் சோகமுறு
மத்திறமு மேதென் றறியே னருளுதியே ;

தன்னைத்தான் பாடியவண் சடகோப னாகியநீ
யென்னைப்பா டென்னைப்பா டென்றிறைவர் நிற்பவவண்
பின்னைத்தா னீயிருந்து பாடியதென் பேசுகவே ;

இவை மூன்றும் மூன்றடித்தாழிசை.

அஃதான்று,

[தனிச்சொல்.]

நற்றாய் நூலைப்பா னயவா விரதங்
கற்றா யதனாற் கடவுளன் றாயிரென
நின்னிலை நினைவரி தெமக்கா
னுன்னிலை நீயே யுணர்வது கடனே.

இது நான்கடி நேரிசையாசிரியச் சுரிதகம்.

இது, நான்குறுப்பாய்வந்ததாயினும் தேவபாணியாய்வருதலின் முதனிலையொத்தாழிசையாகாது, 'ஏனையொன்றே, தேவர்ப்பராஅமுன்னிலைக்கண்ணே'* யென்பதனாற் றேவர்ப்பாராயிற்றேனும் எண்ணிடையிட்டுச் சின்னங் குன்றலின் வண்ணகமு மாகாது ; அதலான் இது எண்ணிடையிட்டுச் சின்னங்குன்றிய கொச்சகவொருபோகாயிற்று. சீர்வகைக்கலிக்கு 'விராய தளையு மொரூஉ நிலை யின்றே'† யென்பதனாற் றளைவிரவப்பெறும். 'கலித்தளை யடிவயி னேரீற் றியற்சீர்—நிலைக்குரித்தன்றே'‡ யென்பதனாற் சீர்வகைக் கலியடியாதலின் வாழ்த்துமென்னு நேரீற்றியற்சீர் வந்தன. (இது) திணை—பாடாண். துறை—கடவுள் வாழ்த்து. அலங்காரம்—சந்தயத்துள் சுத்தசந்தயம். நிச்சயகொர்ப்பம் எனினு மாம். 'ஆறறியந்தண'§ ரென்னுங் கலியு மிது. (சூ)

*தொல். பொருள். செய். 138.
†ஷை ஷை ஷை 61.
‡ஷை ஷை ஷை 25.
§கலித்தொகை. 1.

101 அரவணைமேற் றிரைத்திருப்பாற் கடற்குடபா லறிதுயில்கூர்*
பாணிலவுந் திருவுந்திப் பனிமலர்ப்பொற் பொகுட்டுயிர்த்த
வலகிலவாம் பகிரண்ட மவையனைத்து மகத்தடக்கி
யிலகுமொரு தனிப்பெரும்பா ழினையுமகத் தடக்கியவாம்
விரசையெனுந் திருநதிக்கப் புறத்தாய விழுமியவென்
றுரைபரசும் பரந்தாமத் துடனுறைவோ ரிருந்தெய்துஞ்
சுகமிவணின் றணைமென்றோட் டுயின்முகத்தெய் தினனுக
வகனமர்ந்தும் மையிற்றொடர்ந்த வமைதியவா யுயிரெனலாந்
தொடர்புடைய தமர்பிரியத் தொழிலியற்றி யதுவென்றே
மடலவிழ்வண் பொழிற்சிறைபு மறைதெருளா வகையமைத்துந்
திருவுருவம் பருவநலன் சிறந்தகுல னொடுமொன்றென்
றொருதலையா கவுமமைத்த தொருங்கிவையென் றணைநெஞ்சான்
முயற்சியதோன் றிலனுரு முறைமையிற்கந் திருவமண
மியற்றியதா மியற்றமிழ்தேர் மகிழ்மாற னெழில்வரையிம்
மடவர லினைமகிழ்ந் தளித்த
கடவுளை நினைதொறுங் களிக்குமென் மனனே.

இஃது தன்றளையாற் பதினாறடித்தாய் ஈற்றயலும் ஈறும் மூச்சீரும் நாற்சீருமாகி ஆசிரியத்தளையான வந் தடக்கியலின்றி யடிநிமிர்ந் தொழுகிய கொச்சகவொருபோகு. இங்ஙனங் கலியடியாய்க் கூறுக்கால் நேரிசையாசிரியத்தோடிதனிடை வேற்றுமையின்றெனவுணர்க. 'அகன் ஞாலம்' என்னும் நெய்தற்கலியும் அடக்கியலின்றி யடிநிமிர்ந்தொழுகிய கொச்சகவொருபோகின்பகுதியாய்த் தனிச்சொல்லு மடக்கியலுமின்றி (ச் சுரிதகமற்று) வந்தது. "எழுசீ ரிறுதி யாசிரியங் கலியே", "வெண்பா வியலினும் பண்புற முடியும்"* 'ஒருபான் சிறுமை யிரட்டியத னுயர்பே'† என்பதனானு முணர்க. இக்கருத்தறியார் இதனை வெண்கலியென்ப. வெண்கலியாமாறு முன்னர்க் காட்டுதும். அன்றியும் 'அரிதாயவற னெய்தி'‡ யென்னுங் கலிப்பாவினு மீற்றயலடி 'பல்லியும் பாங்கொத் திசைத்தன' வென மூச்சீரான் வந்தன. 'மணிநிறமலர்ப்பொய்கை'

* தொல். பொருள். செய். 76, 77.

† ௸ ௸ ௸ 151.

‡ கலித்தொகை. பாலைக்கலி. 10.

யென்னும் மருதக்கலியுள் 'இல்லி னெழீஇய யாழ்தழீஇக் கல்லாவாய்ப், பாணன் புகுதராக் கால்' என வெண்பாவியலானும் பண்புறவந்தவாறு காண்க.

இனி, 'யாப்பினும் பொருளினும் வேற்றுமையுடைய'* தென்பது யாப்பின் வேறுபடுவனவும் பொருளின் வேறுபடுவனவும் என இரண்டாம். அவற்றுள் யாப்பின் வேறுபடுதலாவது மேற்சொல்லியவாறும் இனி வருகின்றவாறுமின்றி யாப்பிலக்கணத்தின் வேறுபடுதலாம். பொருளின் வேறுபடுதலாவது கலியுள் ஒத்தாழிசைக் கோதப்பட்ட கடவுள்வாழ்த்துப்பொருண்மையின்றிக் காமப்பொருளாக வருதல்: எனக் கொள்க. எனவே, வண்ணகவொத்தாழிசைக் குறுப்பாகியவற்று ளொன்று மிரண்டுங் குறைந்து வருவன கொச்சகவொருபோகெனப் பெயர்பெறுமெனக் கொள்க. இவ்வாறுவருங் கொச்சகங்களை யொருவரையறைப்படுத்து நான்குபாவினு மினஞ்சேர்த்துப் பண்ணிற்குத் திறம்போலத் தாழிசை துறை விருத்தமெனப் பன்னிருபகுதியாகக் கூறுவர்: அவற்றுள், வெண்பாவிற்கும் ஆசிரியத்திற்கும் இனம் முன்னர்க் கூறினும். ஒழிந்த இக் கலி முதலிய பாவிரண்டிற்கும் இனம் பின்னர்க் காட்டுதும்.

இது பகுதி—இயற்கை. துறை—தெய்வத்தை மகிழ்தல். (௧0)

102 புத்தேளிர் நிரப்பிகப்பான் பொருதிரைப்பாற் கடல்கடைந்து
மெய்த்தேவர் பெருமானும் வேங்கடத்தெங் கண்ணபிரான்
புரந்தருணன் மருந்திறுத்த புலந்துவரத் துறந்திழைத்த
வரந்தருபெண் ணமிர்தாயிம் மடவாண்மென் றேடுறந்தே
யில்லறத்தின் றொடர்புடையோர்க் கின்பமுமா துலர்க்கருத்து
நல்லறத்தின் றொடர்ப்பாடு நனிதருஞ்செம் பொருளென்றே
ஆய்ந்ததனால்.
ஒருதலைபெற் றனணுகி யுருப்பவிர்வெங் கடத்திடைபோய்
வருபொழுதிற் பெருவறங்கூர் மணிநாவின் மம்மர்நோ
யருண்மடந்தை யிலவிதழ்த்தேள் ளமிர்தருந்தத் துறந்தனவே;
அஃதின்று,

*தொல், பொருள். செய், சூ. 149. அடி, 5.

[1]வேனுதிவன் பாற்கடத்தா ரிடைவேனில் வெயிற்குமையாள்
கோனுதற் கட்டழற்குளித்த மதனெனமெய் [2]கூர்ந்தநோய்
பானலங்கட் கிளிமொழிமெய்ப் பரிசத்தாற் றறந்தனவே;

அஃதான்று,

உருவிலா வுருவிற்று முருளிலா மசாதத்தைப்
பருகுவான் புனலெனச்செல் பாலைசார்ந் துளங்கொதிநோய்
[3]திருமகளோ டுறுமின்பத் திரையாடத் துறந்தனவே;

அஃதான்று,

வரையிரு மருங்கினு மரீஇய வெவ்விடம்
புரைசுரத் [4]தாரதர் புக்குயிர்க் குறுநோ
யம்மென் சாய லணிமயில் பைம்பூட்
கொம்மை வெம்முலைக் குன்றிடை முயங்கலி
னனவு கனவா நயந்துழி
நினைக லாநீ ளிடைநீத் தனவே.

இது, தரவு தாழிசை தனிச்சொல் சுரிதகமென்னு நான்குறுப்பி னோடுந் தாழிசைதோறுந் தனிச்சொற்பெற்று நேரிசையொத்தாழிசை யிற் சிறிது யாப்பின் வேறுபடுதலா லொருசாராசிரியர் சிஃறாழிசைக் கொச்சகக்கலிப்பாவென்ப. இதுவும் எண்ணிடையிட்டுச் சின்னங் குன்றிய கொச்சகவொருபோகு. பகுதி—பொருள்வயிற்பிரிதல். துறை— உண்மகிழ்ந்துரைத்தல். (௧௧)

103 மாதர்வாண் முகத்திருடீர் மதிப்பிளவொத் திமிழிசைய
வோதநீர்ப் படுவிடந்துற் றரவிடையார்க் கிடரிழைத்த
மேதையா னிடந்தழீஇ மேம்படுவிற் றணைசெகுத்த
திலகவா ணுதற்செவ்வாய்த் திருமகள்கா முறும்பெருமா
னலகிலாக் குணங்களினுழ்க் தருமறைவண் டமிழ்கூர்ந்த
தெண்டிரைத்தண் டுறைப்பொருநைத் திருநாடனெ றிபிரவரி
வண்டிரைக்கு மகிழ்மாலை மணிமார்பன் றடரிவாய்;

இது தரவு.

---

(மாறனலங்காரப் பாடம்) [1]வேனுதல்வன். [2]கூர்த்தநோய். [3]திருமகளாற் பெறுமின்பத். [4]தாரதர்ப்.

குருந்துளைப்பற் பணியுமிழ்ந்த குருமணிகள் னிருடீரீஇ
யுறும்பகல்போன் றழலினுமா னொளிவிடுநீ ணிலையவால் ;

புறக்காழ்வன் பணையுகுத்த புதுமணிமா தவன்புகழ்போ
னிறக்கார்வெண் மதியினுநீ டிருடோத்த நிலையவால் ;

கொண்டலினாங் கிடியெனவே கோதையிற்பே தறக்குளிறுங்
தொண்டகத்தி னொலியடங்காத் துயரியற்று நிலையவால் ;

ஆளியெனப் பொறிவரிய வம்புலியிற் றெறுந்திறங்கூர்
ஞாளியின்வாய்க் குரைப்புயிர்க்கு நடுக்குதவு நிலையவால் ;

நற்றாயர் முகத்துபய நமன்பொருவு முருவிற்றாய்
வெற்றாலத் தினுங்கொடிதாம் விழிதுஞ்சா நிலையவால் ;

ஊர்துஞ்சா துஞ்சினுமோ வொருசிறைவாழ்ந் திருந்தவய
லார்துஞ்சார் நீளிடைவாழ் பவர்துஞ்சி யெவன்மன்னோ ;

இவையாறு மீரடித்தாழிசை.

எனவாங்கு,

[தனிச்சொல்]

கங்கு லின்னணங் கழியா நின்றது
திங்களஞ் சுடரினிச் சேணுற லுளதா
லின்னுயிர்க் கேள்வ ரெய்தாரென்
பொன்னிறப் பைம்பூட் புணர்முலைக் குவட்டே.

இது சுரிதகம்.

ஏழடித்தாவு மீரடித் தாழிசையாறுந் தனிச்சொல்லும் நேரிசை யாசிரியத்தாலிற்ற சுரிதகமும் பெற்று ஒத்தாழிசையிற் சிறிது வேறுபட்ட விதனையு மவ்வாசிரியர் பஃறாழிசைக்கொச்சகக்கலிப்பாவெண்ப இவற்றது பேதங்களுங் கண்டுகொள்க. பகுதி -- இரவுக்குறி. துறை -- காப்புச்சிறைமிக்க கையறுகிளவி. அலங்காரம்--ஒத்தது வென்றதென் னும் வாய்பாட்டா லொருதொடர்பினுள்வந்த வுவமை. (கஉ

104 மணிமல்கு திரைத்திருப்பாற் கடனடுவெண் வரியாவி
னணிமல்கு மமளியின்மே லறிதுயில்கொள் வுழிமதமா

வழங்குநர்கூர்ந் தழைத்தரூறற் கலர்மடந்தை முகுளமுலைக்
கொழுங்களபத் தினிலழுந்திக் குழைதிருமார் பையுநெகிழ்த்துப்
பூங்கழல்வல் லிலத்துறைப்பாப் பொலந்துகில்சுற் றவிழவிரு
டேங்குநயந் துணர்க்குஞ்சி சுவற்புரளத் துணைத்தோளாற்
றாங்குகவு ழைக்கொடுதாய்த் தாயிடங்கர் முரண்முருக்கித்
தேங்குமலர்த் தடப்புடைசூழ் தென்னரங்கத் தமர்ந்துளாய் ;

இது எட்டடித்தரவு.

ஆங்கும்,

ஆன்ற கதிர்போன் றணுக்கடொறும் வீற்றிருத்தல்
சான்றவர்மெய்ஞ் ஞானந் தரிப்ப வுலகனைத்து
மீன்றருளின் மாயை பிணைத்தெருளா தேயிறப்பை
தோன்றுவைநீ யெனப்படுதெவன் சொல் ;

கற்பனைசால் கோதமனார் கற்படிவங் கைக்கொண்டாள்
சற்படிவ மாகியதைத் தாட்டா மரைதருதூள்
பொற்படிவஞ் செய்ததுறுர் போனம்;

முருந்தி னகையாண் முறுவலிப்பப் பூந்தா
ளிருந்தை யதனை யிளவாச தாக்கிப்
பொருந்த வளித்ததுறுர் போனம்;

அஃதான்று,

அணங்கொருத்தி தன்னை யளித்தியென வொன்றாற்
றணந்தவனிற் கென்னத் தணந்தவனை நோக்கப்
புணர்ந்தவரே யல்லாதப் புண்ணியன்கா ளூத
துணர்ந்திலரோ மூடமுணர்ந் தோர் ;

காத்ததலா லுந்திக் கமலமல ரண்டமெலாம்
பூத்த திறமறியார் போனம் ;

இவையைந்து கொச்சகம்.

துறவற முதலிய துரிசற வருளினன்
அறமலி புதல்வனை யருளிய தறிகிலர் ;

திவமுறு சிறுயர்க ளிருவரோ டிருவரை
யவன்வயி னடைவினி லருளிய தறிகிலர் ;

இவையிரண்டும் அராகம்.

தாதை யாதலும்
புதல்வனாதலும்
பேதையாதலும்
அறிவனாதலும்
பெரியனாதலும்
சிறியனாதலும்
கரியனாதலும்
செய்யனாதலும்

இவையெட்டுஞ் சிற்றெண்.

உணர்கிலர்,

[தனிச்சொல்.]

கன்றொடு சிறுவர் கடைகயி றணிகுணில்
கொன்றையங் தீங்குழல் கொடுமல ரயனெழு
மவ்வுழி யவையவை யவரவர் தெருளுற
வெவ்வுரு வழுமா நினதுரு வழியா
திருப்பவும் வியாத்தியெய் தியதுணர்ந் திலரா
லற்புதன் மாயை யழிவிலாக் கருணைய
சிற்குண நினைத்தெருட் டினரோ
யெற்கிறை யெனமனன் மதித்ததிப் போதே.

இது எட்டடித்தாய் நேரிசையாசிரியத்தா னிற்ற சுரிதகம்.

இது, அம்போதரங்க வொருபோகு; என்னை? 'அம்போ தரங்க மறுபதிற் றடித்தே—செம்பால் வாரஞ் சிறுமைக் கெல்லை'* என்பதனும், 'எருத்தே கொச்சக மாரகஞ் சிற்றெண்—ணடக்கியல் வாரமொ டந்நிலைக் குரித்தே'* என்பதனுனு முணர்க.

இங்ஙனங் கூறப்பட்ட அம்போதரங்கவொருபோகு தன்னுறுப் பெல்லாங் கூட்டி யறுபதிற் றடித்தாகவும், அதன் செம்பால் முப்பதடித் தாகவும், அதன் வாரம் பதினைந்தடித்தாகவும் சிற்றெல்லைபெறு மென்ற வாறு. எனவே யிது தலையளவம்போதரங்கவொருபோகும் இடையள

*தொல். பொருள். செய். 152, 153.

வம்போதரங்கவொருபோகுங் கடையளவம்போதரங்கவொருபோகுஞ் சிற்றெல்லை கூறியவாறாயிற்று. அவற்றுக்குப் பேரெல்லை கூறுமா றென்னையெனின், அறுபதிற்றடித்தெனத் தலையளவிற்கு வேறு கூறிய வழி யவ்வளவைப்பற்றி யதன் செம்பாலும் வாரமும் எனப் பாகஞ் செய்துவந்தாறாதலாற் கடையளவிற்குச் சிற்றெல்லை பதினைந்தாயவழிப் பேரெல்லை முப்பதின்காறு முயருமெனவும், இடையளவிற்குச் சிற்றெல்லை முப்பதாகியவழிப் பேரெல்லை யறுபதின்காறு முயருமெனவும், தலையளவிற்குச் சிற்றெல்லை யறுபதாயவழிப் பேரெல்லை (யிரட்டி) நூற்றிருபதின்காறு முயருமெனவும் கொள்ளவைத்தான் என்பதாம்.

ஆதலால் இது, நாற்பத்துநாலடியால் வந்தமையால் (இடையெல்லை.) இடையளவம்போதரங்க வொருபோகு. ஒழிந்தனவும் இவ்வாறேவரும். இவையெல்லாம் இக்காலத்து வீழ்ந்தனபோலும். திணை—பாடாண். துறை—கடவுள்வாழ்த்து. (ஒத்தாழிசைக்கலியின்வகை முற்றும்.) ()

105 பொன்னெடுங்குன் றெனச்செறிந்து [1]புடைத்தெழுமென் புளகமுலை
மின்னெனலா றுணுகிடையவ் வேய்புரையுந் [2]துணைமென்றோட்
குளிர்மதிபோன் [3]றொளிர்வதனக் கோமளப்பூங் கொம்பன்னா
டளிர்புரைமெல் லடிச்சுவடுந் தளர்ந்தன [4]வெய் யோனென்றாற்
குடதிசைவான் கதிர்சுருக்கிக் கொடித்தேரி னொடுமறைந்தா
னடல்புனைவே [5]லவரொன்று லற்றம்பார்த் தாறலைப்பர்
பொன்புனைபூண் மணிமார்பிற் புரவலவின் றிருவிரு
நன்குலத்தெம் மில்வைகி நறுந்தேன்செந் தினையருந்தி
மனையதனிற் [6]றுயிலமர்ந்து வைகறைவாய்த் துயிலெழுந்து
விரைகமழ்தார் மகிழ்மாறன் மெய்த்தமிழ்ச்சொற் குருகூரின்
முதிர்திரைப்பா லாழியின்வான் முகடுரிஞ்சு முதயகிரிக்
கதிர்வருமுன் சேர்தல் கடன்.

இது, வெண்கலிப்பா. என்னை? 'வெண்டளை தன்றளை யென்றிரு தன்மையின்—வெண்பா வியலது வெண்கலி யாகும்' என்றார் காக்கைபாடினியார். இதனுள்ளும் வெண்டளைதட்டு வெள்ளோசை தழுவியும் கலித்தளைதட்டுத் துள்ளலோசைத் தாகியும் ஈற்றடி முச்சீ

(மாறனலங்காரப் பாடம்) [1]புடைபரந்த. [2]தடமென்றோட். [3]மிளிர்வதனக். [4]வெய்யோன்மன்னே. [5]இவர்குறுகியற்றம்பார்த். [6]றுயில்வைகி.

ரான் வந்தவாறு காண்க. பகுதி—உடன்போக்கு, துறை—நெறிவிலக்கல். அலங்காரம்—அவயவ அவயவி யிரண்டினையும் உவமைப்படுத்தலான் முற்றுவமை. (௧௪)

106 படுதிரைப்பா லாழி பயந்தவெண் டிங்க
ணடுவண தாகிய நாண்மலர் நீல
மிணையென வாண்முகத் தெய்துக் துணைவிழி
நன்னீ ரருவி நறுந்தே னருவியுடன்
மன்னீர்மை வாய்ந்தனவா மாழை வரைபுரையும்
வெண்மணித் திலத்தாம மேதகுமா மணிவடத்திற்
பண்ணமைத் தோங்கிய பைம்பூட் புணர்முலை
கூற்றுரு நேர்ந்தோர் குறிப்போ டியிருண
மாற்றுருக் கூர்தன் மருள்வண ரைம்பா
லெம்போன் றடிப்பணி யீறின் றியற்று
துமதா ருயிர்கொண் டொருவுமின் சேய்த்தென்
றருடக வாண்டாண் டணித்தூறு மைந்தர்க்
குருபமை நூபுர மோவா தொலிக்குந்
தளிர்புரை மெல்லடித் தையல் பொருட்டா
விளம்பிறை வெண்கோட் டிரும்பிணர் வான்கை
வளங்கெழு தீவிழி வாரண வேட்டைக்குச்
சிங்கங் குழூஉச்செய் சீறா ரதரிடை
யிங்கியாந் துன்புற வீண்டிருள் யாமம்
பனிமகிழ் மாறன் பராங்குசன் வெற்பிற்
றனிவரல் வேலோய் தவிர்.

இது, கலிவெண்பா. என்னை? 'ஒருபொரு ணுதலிய வெள்ளடி யியலாற்—றிரிவின்றி நடப்பது கலிவெண் பாட்டே'* என்பதனா லுணர்க. இதனுள் வெண்டளைதட்டு வெள்ளோசை தழுவிவந்தவாறு காண்க. பகுதி—இரவுக்குறி. துறை—இரவச்சங்கூறி வரவுவிலக்கல். அலங்காரம்—பெயரொடு பெயர் நிரனிரையுவமை. இல்பொரு ளுவமையு முள. (௧௫)

*தொல், பொருள், செய் 154.

107 குருகையின் மகிழ்மாறன் குலகிரி தனில்வைகுந்
திருமுக மதிபோலுஞ் சிறுபிறை நுதன்மன்னே
விருகயன் மதர்நோக்க மிலவின திதழ்செவ்வாய்
பருமணி நிரையென்னப் பழுதற மிளிர்மூரல்
வருமிள முலைமாதே மதகளி றெனலாகு
மொருபிடி யிடையாகு மொருபிடி நடைசாலு
முருவளர் பணைமென்றோ ளுயர்வுறு மரவல்குல்
கருமுகில் குழன்மொழி கரும்பு.

இது, ஆசிரியத்தளையானுந் தன்றளையானும் வந்த வெண்கலிப்பா. பகுதி-சேட்படை. துறை-அவயவங்கூறல். (கலிவெண்பாட்டுமாற்றும்.)

108 மலர்புரை யாணர் மையுண்கண் மொய்யிழாய்
உலகிய லறிந்தோ ருசாத்துணை யுள்ளத் தருமறை
தமவெனுங் கருவிக ளடங்காச் சாக்கிரத்
தமர்தரு மகத்தவை யடங்கிய வேலைய
சொற்பன சுழுத்தியிற் பராவலுந் துன்னுனர்க்
குற்பவ மாமுளத் தெனலுண் மையதாம் ;

இஃ திரண்டாமடி யைஞ்சீரான்வந்த வாறடித்தாவு.

நினதூரன்,-[இது கூன்].

தலையவிழ் பல்பூத் ததைமெல் லணைமேல்
விளைவுறு வேட்கையின் விம்மிதனாகி
வளைமலி முன்கையை வாழ்த்துபு பற்றி
யிளையகில் யாமத் தினில் ;

பூங்குழ லோர்கையிற் றாங்கினன் றாங்கலு
மீண்டிய மென்மை யினிமையிரா கங்கமழ்தல்
கூண்டு மழலை மிழற்றுங் குளிர்புவளம்
யாண்டெய் தினைநீ யெனும் ;

வேரிக் களப மெழுகித் தரளவடம்
பரித்த சொம்மை முலைநெருங்கப் புன்முறையும்

பூரித் தழுந்தப் புணர்மார் பிணைநோக்கி
யார்நிற் இணையிங் கெனும்;

இவை மூன்றுங் கொச்சகம்.

வாய்ந்தமருந் தீன்ற மலர்மடந்தை நண்படிவ
மீந்தவர்தாம் யாரிங் கெனும்;

இது வெள்ளைச்சுரிதக மிடைவந்தது.

கழுவா மணிக்குக் கவினுமூறப் பெல்லாம்
வழுவா தமைத்து மலர்தூவிக் கண்டார்
தொழுதா தரிக்கத் துளக்கமதுய்த் தாரீ
ரெழுபா ரினும்யா ரெனும்;

இயற்கை யுறுப்பி னெழிலணிகள் வேய்ந்தார்
முயற்சி மறைத்தருளு மூடமிஃ தென்னென்
றுயர்த்தி யுறுகட் டுரையினுள மொன்றப்
பெயர்த்துந் தழுவிய பின்;

இவையு மோரிரண்டு கொச்சகம்.

அணியிழாய், [தனிச்சொல்]

இக்காலத்தாராக்கவிஃதென் னென் றுணர்வே?
னக்காலத் தொன்றி யயர்வுற் றனன்மன்னே;

இது பேரெண்.

தோய்ந்த துயில் விட்டுத் துணுக்குற் றுணர்வுறலு
மாய்ந்ததட மென்றோ ளணைமேற் றுயில்கொள்வா
ளாய்ந்ததட மென்றோ ளணைசேர் துயின்முகத்தாங்
கேர்திழைக்கென் னீக்கமிஃ தென்றுமென் றுமென் றும்;

ஆற்றுவா ராற்றற் கமைதருமந் நோயதனைப்
போற்றுவார் மாட்டென் புகழ்பழியென் பான்மன்னே
போற்றுவார் மாட்டென் புகழ்பழியென் றூற்பிரிந்
தேற்றுவாய் நெஞ்சே யெனுமறைசிந் தித்தனனால்;

இவை யிரண்டுந் தாழிசை.

சிந்திப் பதனொடுமிச் சிந்தை யறைபோக
வந்திப் பசலை மறைத்ததுமெய்ம் மாசுணவே;

இதுவும் பேரெண்.

ஏடீயென் சொல்வேன் மன்யான் பிரிவென்ன
நீடிய வுள்ள தவர்க்கு;

இதுவும் கொச்சகம்.

ஆயினும், [இதுவுந் தனிச்சொல்]

எனதுயி ரெனவுறு நினதுயி ருணர்வுற
மொழிவது மொன்றோ பிரிவது புரிபவ ருடனே காமுறு
மனனே, குழைமயிலை யுண்பது முறக்கமு மறக்குமென்
னையரிக் கண்கள தல்லான் மன்றோ
மெய்யென வுணர்ந்துணர்த் துகநீ
பொய்யென வுடலினை யுயிர் துறக் குமதே.

இதனுள் முதலடி முழுது முடுகியலாகவும், இரண்டாமடி யிருசீர் முடுகியலாகவும், மனன் என்பது சொற்சீராகவும் வந்தன.

இவ்வாறு வருவன கொச்சகக்கலிப்பா வெனப்படும். ஒத்தாழிசைக் கலிப்பாவிற்குத் தாழிசையாகிய வுறுப்பு மிக்குவந்தாற்போலக் கொச்சகக் கலிப்பாவிற்கும் வெண்பாவாகிய வுறுப்பு மிக்குவருமென்று கொள்க. இனி, மீண்டோதப்பட்ட வுறுப்புக்கள் மிக்குங் குறைந்தும் மயங்கியும் வருமவை கலித்தொகையுட் கண்டுகொள்க. இதற்குக் கூறிய தொல்காப்பியத்திற் சூத்திரம்: 'தரவும் போக்கும் பாட்டிடை மிடைந்து—மைஞ்சீ ரடுக்கியு மாறுமெய் பெற்றும்—வெண்பா வியலான் வெளிப்படத் தோன்றும்,' 'பாநிலை வகையே கொச்சகக் கலியென—நூனவில் புலவர் நுவன்றறைந் தனரே'* என்பதாம். இச் சூத்திரத்தைத் 'தோன்று' மென்பதளவும் பிரித்து வேறாக்கி இதனைக் கலிவெண்பாவி னுறுப்பின் வேறுபட்ட கொச்சகமென்றும் ஒருசாராசிரியர் கூறுவர். இது தலைமகன் குறிப்புக்கண்டு பிரிவர்கொல்லென வையுற்றுச்செல்கின்ற தலைவி யக்காலத்துத் தலைவன் கனவினாற்றல்கேட்டுப் பொருள்வயிற் பிரி கின்றானெனத் துணிந் தாற்றாளாய்த் தோழிக்குரைத்தது. (கள)

*தொல். சொல். செய். 155, 156.

109 முள்ளுடைத் தாட்டா மரைமலர் முன்னிய
பிள்ளைமை யெய்தாப் பிதாமக னாகிய
தெள்ளிய நான்முகத் தோதியுந் தேர்வரு
மொள்ளிய நான்மறை யோதா துணர்வினுட்
கொள்பவ னாகிக் கொழித்த தமிழ்மறை
புள்ளுயர் கேதனத் தாற்கருள் பொன்மகிழ்த்தார்
வள்ள லுயர்குடரி வாய்;

இஃ தேழடிப் பஃறொடைவெண்பா.

திருந்திய வெண்ணெண் கலைகளுந் தெற்றெனத்
தரும்பனு வலின்றுறை சார்ந்துணர் கேள்வி
பொருந்திய பழிபிறங் காவருட் புரவல;

இது மூன்றடி நிலைமண்டிலவாசிரியப்பா.

நெய்த்து மிருண்டுஞ் சுருண்டு நெறித்தனவாய்
மொய்த்தகுழல் கோதி முடிமுச்சி
வைத்தமுகை விண்டு மதுத்தூய்ச் சுவற்புரள்வ
துய்த்திங் கெழுதுவதொன் றோ;

இருட்பான்மை யின்றி யிருதிணையும் பானுட்
பொருட்பான்மை முற்றப் பொறிப்பவரொன் றாலு
மருட்பார்வை மையுண் மதாரிக்கண் செய்யு
மருட்பார்வை தீட்டுவதிங் கார்;

இவையிரண்டு மின்னிசைவெண்பா.

காந்தளிதெனு மிணைக்கரங்க ளையெழுதினு
மாய்ந்தணி வரிவளை யவையுரா யொலிப்பதுந்
தோய்ந்திட வெழுதவுந் துணிபவர் யாரே;

இது மூன்றடி நிலைமண்டிலவாசிரியப்பா.

வண்ண மணிக்கச்சின் வன்கட் டறவிம்மித்
தண்ணென்னும் வெச்சென்னுந் தன்மை புரிவனவாய்
வெண்ணித் திலவடங்கண் மீவாவும் பூண்முலைமேற்
பண்ணப் படுமோ பகர்.

இது, இன்னிசைவெண்பா.

உண்டிலையென் றைய முறுநுண் ணிடையுருவங்
கண்டெழுது வாரெவர்மென் காலுறினுந்—தெண்டமதுட்
கொண்டொசிதல் கூடும் படிக்குங் குறித்தெழுதும்
பண்டிதரிங் காருளர்நண் பா;

இது நேரிசை வெண்பா.

பலவாய், மறித்தினி யுரைப்பதென் மடவா லவயவ
நெறிப்பட நிகழ்த்திய படிநீ கிழியினிற்
செறித்துள தென்னிற் சீறூர்
குறிக்கொளக் குழுவொடுங் கொடுபோ துகவே.

இது, நான்கடியாய்வந்த நேரிசையாசிரியச் சுரிதகம்.

இது, அகநிலைக் கொச்சகக்கலிப்பா. என்னை? 'பாநிலை வகையே கொச்சகக் கலியென—நூனவில் புலவர் நுவன்றறைந் தனரே'* என்றாராகலின். பகுதி—மடல். துறை—அவயவமெழுத வரிதெனவிலக்கல். 'அகவினம் பாடுவாந் தோழி' என்னுங் குறிஞ்சியுட் கலியும் பா விது. ()

110 கதழ்பரி பூண்ட கடுந்தேர் கடாஅய்
மதனுடை நோன்றாள் வலவனி னீயற்
புதமிவ ணெய்தல் புதனழிந்தீர் போலுந்
திதமகிழ் மாறன் றிருக்குரு கூர்வா
ழிதமரு ளெங்கைய ரீதுறி வின்பஞ்
சுதனுறுந் தேர்மீளத் தூண்டு;

மடநல்லாய்,

தவறொன் றிழையாத் தமியேனை யீன
விவற லுடையா யெனலாலிப் போழ்து
கவர்வுற் றதுநெஞ்ச கம்;

புனலூர,

பொய்யினைப் பொய்யாகப் புறம்போக்கி மேதக்க
மெய்யினை மெய்யாக்கும் விழுமியவர் மாறுடுஞ்
செய்கைப் பொதுமகளிர்ச் சேர்ந்தாங் களவளாய்

* தொல். பொருள். செய். 156.

மைய லூரநின் மனைவாக்கும் வெண்பளிங்காய்
யெய்திற்றென் சொல்வ தினி ;

இன்சொல்லாய்,

சொல்வன் மையாராந் தூய்வற் றவர்விறற்சொல்
வெல்வன் மையாரார் விளம்பு ;

புரவல கேட்டி,

நனிநீ ரவரு நகுதற் பொருட்டாய்த்
தொனிநீர் வளைமுன்கைத் தோதகங்கூர் மாதர்
முனிநீர் மையாரக முள்ளுகிராற் செய்புண்
பனிநீர்பெய் சாந்தெழுதும் பண்பின் மறைத்துட்
கனிநீர் மையர்போலக் கையிருதாள் பற்றித்
தனிநீ குறையிரப்பத் தாழ்ந்ததுள நின்க
ணினிமேலென் செய்குவல் யான்.

இது, உறழ்கலி. என்னை? 'கூற்று மாற்றமு மிடையிடை மிடைந்தும்—போக்கின் றாத லுறழ்கலிக் கியல்பே'* என்னும் விதியால் ஐஞ்சீரடுக்கியும் ஆறுமெய் பெற்றும் போக்கின்றி யிற்றவாறு கண்டுகொள்க. 'அரிநீ ரவிழ்நீல மல்லி யனிச்ச' மென்னு மருதக்கலியு மிது. (௧௧)

111 அன்றினர் நிறத்துற வழுத்துபு பறியா
வன்றிறன் மாரதர் வலம்பட வேந்திய
கொழுங்குருதிப் புனன்முழுக்குண் கூரிலைவே லினைவென்றே
யழுங்கஞர்கூர் நமன்படைபோன் றமர்புரிமை யுண்கணார்
மந்தரவெற் பினைப்பழித்து வயிரமணிப் பருவரைபோற்
சுந்தரமொன் றியபைம்பூட் டிணைத்தோளும் புனலூரன்
மின்றிகழ்தட் டொளியினுமாண் மிளிர்வெய்திக் கதிர்சுலாம்
பொன்றிணிமால் வரைமார்பும் புணையாகப் பொதுவுண்பான்;

இவையிரண்டு நாலடியாய்வந்த தரவு.

தண்ணறும்பூந் துணர்ப்பொதும்பர்த் தமிழ்மலயத் தரவுமிழ்ந்த
வொண்மணியும் பசுங்கழைவிண் டுகுமணியுங் கைக்கொண்டே;

வயிரவழற் பிழம்பெறிகண் மால்யானை மதமாடி
வெயில்விரிபொன் னசும்பதனை மெய்ம்முழுது மீட்டித்தே;

*தொல். பொருள். செய். 157.

பொறிவரிவண் டுளர்நறுமென் பொதியவிழ்பூ நறவருந்தி
வெறிகமழ்சந் தகிலுகம் வேர்முதல்கீண் டுருட்டியே;

மாங்கனியும் வாழையின்மா ழையங்கனியும் வருக்கையின்மாண்
டீங்கனியு மெவ்வுழியுந் திசைதிசைபோய்த் திரைத்தெடுத்தே;

முதுமொழிவான் பொருட்டிறங்கண் முழுவதூஉ முதுக்குறைவாற்
பொதுவறவுட் கொண்டவரிற் பொருண்முழுதுங் கவர்ந்துராய்;

நெடும்புடனின் றுருதிவலை நிலத்துறமுன் னெதிர்கதுவிச்
சுடுஞ்சுரந்தண் மருதமெனத் தோன்றுதற்கா யிடையடைந்தே;

இவையாறு மீரடித் தாழிசை.

புறவு பருந்தொ டெருவை வெருண்டு
பறவிய பம்பு தொழுதி வழங்கவே;

உலவை முளிந்த குடச முழிஞ்சி
விலகு கடம்பு குரவை நெருங்கியே;

இரலை மருண்ட பிணையொ டிரங்க
வருண நிறங்கொண் ஞமலியை யுந்தியே;

உலைவில் குறும்பி னெயினர் கணஞ்செ
யிலைபெய் குரம்பை யுழுது பெயர்ந்திட;

இவை நாலு மராகம்.

குல்லையுந்தே னிமிர்கொழும்பொற் கொன்றையுந்தண் காயாவு
முல்லையுந்தோன் றியுந்துவன்ற முல்லையுளொல் லையிற்படர்ந்தே;

ஆம்பலந்தீங் குழற்குடவ ரகன்பாடித் தொழுவுறாஉ
மோம்படைமூ விலையொன் றிற் கொன் றுலக்கற் றிரியவே;

குடப்பால்வெண் டயிர்விராய்க்குளிர்புனற்கங் கையைப்பழித்துக்
கடற்பாலின் வளமலிந்து கவின்மருதங் குறுகியே;

கருமேகந் தொடுசிகாக் கருவரையும் பொருவலவெண்
திருமேரு வெணப்பணைத்த விருகரையி னெடும்பொருதே;

சுடுமண்ணுறப் படுத்திழுகு சுதைவழித்த மடைமுழைபுக்
கிடுமணுறு புழுவினைவென் றெழிலியெனக் குளிறியே;

ஊதியங்கொள் வதற்குளதொன் றுதவினர்தம் முதவியையென்
றீதலியல் பறிந்தோரி னெழின்மணியேற் பவர்க்குய்த்தே;

இவையு மோராறு மீரடித்தாழிசை.

எனவாங்கு, [தனிச்சொல்]

வண்டானத் துணைபுரிய;
மகன்றிலுந்தன் றுணைபிரிய;
தண்டாத வனமிரிய;
தடஞ்சிறைப்புள் ளினமிரிய;

பொய்கை தொறும்பரந்தே;
பொழில்க டொறும்பரந்தே;
செய்க டொறும்பரந்தே;
திரள்கரும் பிற்பரந்தே;

இவை யெட்டும் இருசீ ரோரடிச்சிற்றெண்.

பரந்த, [தனிச்சொ லிதுவும்.]

மதிநலத்தான் மிக்க மறைத்தமிழ்தேர் மாறன்
முதிய மகிழ்மாலை முன்னோன் குருகூர்த்
ததியர் புகழ்சங் கணித்தண் டுறையுட்
புதியவா மந்தண் புனல்.

இது, ஈரடிச்சிறு தாழிசையாறு மாக நான்குந் தாழிசை பின்னுமோராறுந் தனிச்சொல்லும் இருசீரோரடிச் சிற்றெண் எட்டும் பின்னுமோர் தனிச்சொல்லும் பெற்று, இன்னிசை வெள்ளைச்சுரிதகத் தா லிற்றுக் கலிக் கோதப்பட்ட வாறுறுப்பும் மிக்குங் குறைந்தும் பிறழ்ந்து முறழ்ந்தும் மயங்கிவந்தமையான் இதனை யொருசாராசிரியர்—யாப்பருங்கலக்காரிகையார்—மயங்கிசைக் கொச்சகக்கலி யென்ப. ஆசிரி யத்தொடும் வெண்பாவினொடும் மயங்கிவந்தமையா னென்று கொள்க. பகுதி—பாத்தையிற் பிரிதல், துறை—புனல்வாவுரைத்தல். அலங்காரம்—வென்ற தொத்த' தென்னும் வாய்பாட்டா லொருதொடர்பினுட் பல வந்த வுவமை. இதன் வேறுபாடுங் காண்க. (உ0)

**கலிப்பா முற்றும்.**

112 கெய்யமர் வேல நெடுமா லரங்கத்துன்
னையரிக் கண்ணியை யாரென வின்னு மறியேன் யான்;

செஞ்சுடர் வேல திருமா லரங்கத்துன்
னஞ்சனக் கண்ணியை யாரென வின்னு மறியேன் யான்;

செம்புகர் வேல திருமா லரங்கத்துன்
னம்பமர் கண்ணியை யாரென வின்னு மறியேன் யான்;

இவை மூன்று மிரண்டடியா யீற்றடி யிரண்டுசீர் மிக்குவந்தமையாற் கலித்தாழிசை. பகுதி—சேட்படை. துறை—அறியாள்போன்று நினைவுகேட்டல். அலங்காரம்—அவயவவுவமை. (க)

113 தாய்போன் றுலகளித்த தஞ்சைமால் வெற்பனையாய்
செய்போன் றொளியுடையான் செங்கைத் தழைதாலுஞ்
செய்போன் றொளியுடைய கொண்டிலனென் சித்திரத்தால்
வாய்போன் றினிவரிலென் சொல்லி மறுப்பன் வினையேனே.

இஃ தீற்றடி யொருசீர் மிக்கு வனையடிகண் மூன்று மொத்துத் தனியே யிடைமடக்காய்வந்த கலித்தாழிசை. இதுவும் பகுதி யது. துறை—தலைவி குறிப்பறிதல். அலங்காரம்—அவயவியுவமை (உ)

114 மின்பெற்ற மேக மெனமிளிரு மெய்த்திருமா
லன்பிற் றருதழையை யாயிழையா
ளன்பிற் றருகவென வாங்கி யதையணைத்த
பின்புற்ற வின்பப் பெருக்கென் புகல்வென் பெருமானே.

இஃ திரண்டாமடி மூன்றுசீராகக் குறைந்து முதலடியு மூன்றாமடியு மளவடித்தாய்த் தம்மி னொத்தும் ஈற்றடி ஐஞ்சீராய்த் தம்மி லொத்து மொவ்வாதும் வந்த கலித்தாழிசை. பகுதி—இதுவுமது. துறை—தழைவிருப்புரைத்தல். அலங்காரம்—இதுவுமது. (௩)

115 வாளி பின்செல முன்செலு மறிபுன லொழுக்கத்
தாளி பின்செல முன்செலு முகிளி றந்தோ

கோளில் வான்பிடி குறுகலும் புணர்ச்சி யுட்கொளலால்
வேளின் மேதகு பெருவிறல் யாவரே விளைத்தார்.

இது நெடிலடி நான்காய்வந்த கலித்துறை. துறை—நாடுவாழ்த்து. அலங்காரம்—தொழிலதிசயம். (௪)

116 அடனி லாதா ணிழந்துளார் யாவரே யானு
மிடனி லாரிடை பணிபவ ராமெனன் மெய்யே
யுடனி லாதவாய் ஞாளிமுன் பிரிநரி யுறுநீர்ப்
படரு மாகளிற் றெருத்ததாய்க் களித்தது பாய்ந்தே

இதுவுங் கலித்துறை. அலங்காரம்—நிதரிசனம். (௫)

117 இறைவ னுலலைந் திரியல்போ குனரிறை மையிலாச்
சிறைவ லாருழைச் சரண்புக வுடனிரி திறனென்
றறைவ தாம்புன லலைக்குமா ளிகடுதிக் கையினத்
துறைவன் மாமுத றழீஇயுட னிரிதரு தொடர்பே.

இதுவுங் கலித்துறை. திணையுந் துறையு மது. அலங்காரம்—வினையுவமை. (௬)

118 கலங்கு பாய்புனல் கடிந்தெழக் கவட்டொடு மலங்கப்
புலங்கொ டாருவிற் புட்குலம் போகலா திரைத்தல்
குலங்க டாங்குனர் நடுக்குறக் குலத்துளா யவர்பா
னலங்கொள் வார்குழீஇக் கலுழ்வதே போன்றன நவிலின்.

இதுவுங் கலித்துறை. திணையுந் துறையு மது. அலங்காரமுமது.

119 அறைபொரு தமிழ்தரு மணியைத் தாருவை
நறைமரை வளக்கபி லையினை நாகினைத்
துறைதொறுஞ் சுழித்தெறி தொகுதி பாற்கட
னிறையமிழ் துயிர்த்தபல் வளநி கர்க்குமே.

இது கலிவிருத்தம். அலங்காரம்—தொழிலுவமையுள் ஒருவயிற் போலி. (௭)

120 தாங்கவான் புனலிரு கரையுந் தாக்கலின்
மாங்கடா மசைந்தல ருகுத்தல் வரமுமெழ்

முரங்கெடா தளித்திடுமென் றள்ளிக் கொம்பராங்
கரங்களாற் பனிமலர் கவிழ்ப்ப போன்றவே.

இதுவுங் கலிவிருத்தம். அலங்காரம்—தற்குறிப்பேற்றவுவமை.

121 மண்ணக மடந்தைதன் வரம்பை வான்புனற்
பெண்ணா சழித்ததென் றலகம் பேசுமா
றெண்ணியே யளவினுக் கெங்கு மார்த்தியா
யுண்ணுநீர்க் கடனையு மூதகிக் கீந்தவே.

பாவும் அலங்காரமும் இதுவுமது. (கம)

122 புக்கமா நதிக்கெதிர் புணரி மாமணி
யொக்கவே தெளித்திட லுததி நாயகன்
மிக்கநா யகியென விரைந்து பாதகா
ணிக்கையாய்த் திரைக்கரத் திடுவ போன்றவே.

பாவும் அலங்காரமும் இதுவுமது. (கக)

123 மடைதிறந் தொழுகுநீர் வாவி வாய்ப்புக
மிடைதிறந் தருமர விந்த நாண்மலர்
புடைதிறந் ததுமலர்ப் பூவை பொன்னிதழ்க்
கடைதிறந் தெதிர்கொள நினையுங் காட்சித்தே.

இதுவும் பாவும் அலங்காரமும் அது. துறை—அஞ்சும் நாடு வாழ்த்து. (கஉ)

கலிப்பாவினம் முற்றும்.

---

## வஞ்சிப்பா.

124 கறைவேல்விழி யிலவிதழிதழ்
நறைநாண்மல [1]ரம்புயமுகம்
புருவஞ்சிலே யுருவம்புய
லுருவம்புரி குழலெனுமது
பொன்னங்கிரி கொங்கைத்துணை
[2]மின்னென்றுண ரிடைகண்டிலன்
எனவாங்குக்

---

(மாறனலங்காரப் பாடம்) [1] ரஸ்தானனம், [2] மின்னென்றுரை யிடை.

கற்றறி வுடையவென் னிறையினைக் கலந்து
ணற்றிரு வுறைவிட னண்பா
சொற்றமிழ் மாறன் றடாரிவண் பொழிலே.

இஃது தொன்றியு மொன்றுதும் வஞ்சித்தளையான்வந் தாறடித்தாய் 'எனவாங்கு' என்னுந் தனிச்சொற்பெற்று நேரிசையாசிரியச் சுரிதகத்தா லிற்ற குறளடி வஞ்சிப்பா. அலங்காரம்—தொகையுவமை. பகுதி—பாங்கற்கூட்டம். துறை—இயல்பிடங்கூறல். (க)

125 வான்றோய்கதி ரடற்றிகிரியை வலனேந்தியு
மீன்றோய்மதி யிளிர்வலம்புரி யிடனேந்தியுங்
கவுத்துவமணி வனமாலிகை கவின்மார்பினிற்
பவித்திரமுறு மலர்மாமகள் பயில்வாழ்வினன்
மகரக்குழை தழைகாதினன் மணிமௌலியன்
சிகரப்பஃ றலைசேர்வட மலைமேலுறை

செல்வனை,

அனவா தமும்வரி யளிசெறி தளையவி
ழினமலர் தூயிறைஞ் சினர்பாற்
கனவிலு முறான் கொடுங்கணிச்சி யோனே.

இது, ஆறடித்தாய்ச் செல்வனையென்னுந் தனிச்சொற்பெற்று நேரிசையாசிரியச் சுரிதகத்தாலிற்ற சிந்தடிவஞ்சிப்பா. திணை—பாடாண். துறை—கடவுள்வாழ்த்து. அலங்காரம்—பொருட்டன்மை. (உ)

126 பைம்பொற்குன்றே பணையிளவனமுலை
யம்புத்துணையே யரிமதருண்கண்
குனிசிலையிரண்டே கொடுநன்புருவம்
பனிமாமதியே பழிதீர்நன்முகங்
கொடியேதளரிடை கொண்மூவேகுழ
லாடரவின்பட மாமேகடிதடங்
[1]காந்தளந்துணைமல ரவையேகையும்
பூந்தளிரன்றே புடைபெயர்மெல்லடி

நண்பா,

(மாறனலங்காரப் பாடம்.) [1] காந்தளின் றுணைமலர்க் கவினே கையும்.

படர்புகழ் மாறன் பாரங்குசன்
[1]றடரிவண் பொழிலே தோகைய திடனே.

இது, பொதுச்சீர் பதினாறும்வந்து 'நண்பா' வென்னுந் தனிச்சொற் பெற்று ஆசிரியச்சுரிதகத்தாலிற்ற குறளடிவஞ்சிப்பா. துறை-இயல்பிடங்கூறல். அலங்காரம்-நிடமவுவமை. (ரு)

வஞ்சிப்பா முற்றும்.

---

## வஞ்சிப்பாவினம்.

127 நறைமகிழ் மாற - னுறைநக ராடவர்
மறைமொழி நினைதொறு - நிறை தளாருமே ;

திருமகிழ் மாற - னருணக ராடவ
ரருடலை நினைதொறு - முருகுமென் னிறையே ;

பொன்மகிழ் மாற - னன்னக ராடவர்
முன்னுரை நினைதொறு - மென்னிறை யிலவே.

இவை குறளடிநான்காய் மூன்றும் ஒருபொருண்மேல் வந்தமையால் வஞ்சித்தாழிசை. பகுதி-பொருள்வயிற்பிரிதல். துறை-பிரிவு நினைந்திரங்கல். அலங்காரம்-சுவையினுள் அசைவுபற்றிய அழுகை. (க)

128 தண்டமிழ் மாறன், வண்குரு கூரார்
நண்புற வாரார், கண்டுயி லாவே.

இது, இருசீரடி நான்கினு லொருபொருண்மே லொன்றுய்வந்தமையால் வஞ்சித்துறை. துறையும் அலங்காரமும் இதுவுமது. (உ)

129 நீராகாகமா, தாரமாகமே
வாரமாகமா, ஞாஞககா.

இதுவும் வஞ்சித்துறை. துறை-கடவுள்வாழ்த்து. அலங்காரஞ் சொல்லணியினுள் பிசிந்தெதிர்செய்யுள். அநுலோமப் பிரதிலோமமென வடநூலார் கூறுவது மிது.* (ங)

---

(மாறனலங்காரப் பாடம்.) [1]தடரிமால் வரைவளர் தோகைய தியலே.

130 சதிதக னடனுடை, திததிதிகாண்ஞானு
தகிதா கார்கண்ட, கதிகா கிளர்கான.

இதுவுமது. துறையுமது. அலங்காரம்—சொல்லணியினுள், சுழிகுளம். (ச)

131 கொந்தார் திருமகிழ் மார்பினர்
செந்தா மரையடி சேர்பவர்
தந்தா வளமுறை காரண
னந்தா மந்தனே யாள்வரே.

இது, சிந்தடிநான்காய்வந்தமையான் வஞ்சிவிருத்தம். துறை—இதுவுமது. அலங்காரம்—சுவையினுள், கல்விபற்றிவந்த பெருமிதம்.

வஞ்சிப்பாவினம் முற்றும்.

---

## மருட்பா.

132 வாய்ந்த மகிழ்மாறன் மால்வரைமான் கண்ணிமைக்கு
மோர்ந்தகழு நீர்மென் முகைவாடும்—பூந்தளிர்க்
கானிலம் படர்தலுங் கண்டன
மானிட மகளே யணங்கலண் மனனே.

இது கைக்கிளை மருட்பா. பகுதி—இயற்கை. துறை—தெளிதல். அலங்காரம் சந்தயத்தினுள் நிச்சயாந்தம். (க)

133 தேவர் பெருமான் றிருப்பாற் கடல்கடைந்தோன்
மூவ ரெனவாழ் முதல்வ னனைத்துயிர்க்குங்
காவல் புரிவானிற் காக்கவே யாவர்க்குந்
தண்ணளி புரிமகிழ் மாஅ றநியரி
ஞெண்ணிதிச் செல்வம துடனீ
மண்மிசை வாழி மதிநலந் தழைந்தே.

இது புறநிலைவாழ்த்து மருட்பா. திணை—பாடாண். துறை—புறநிலைவாழ்த்து. அலங்காரம்—வாழ்த்து. (உ)

134 பொய்தீர் புலவீர்காண் மாறன் பொருளுரைதேர்ந்
தெய்திரெய் தாது மிருந்திலீர்—மெய்யாக
வின்பமுடன் றுன்ப மிழவுபே றென்பவைதா
முன்பிழைத்த வூழான் முறைபிறழா—தென்பதுநீர்
மானிடம் பாடி மதியாது பொய்சொல்லி
யீன விளிவரவா லேற்றுண்டு—போனதுநாட்
கூற்றுவன் செய்யுங் கொடுந்தொழிலுந் தீரநகி
ளுற்றலவை கேட்டு மடங்கலீர்—பாற்கடற்
பூரணன் மலர்மகள் புரவல னகில
காரணன் வடவேங் கடவ
ஞாரணன் கழலினிப் பாவுமி னயந்தே.

இது, வாயுறைவாழ்த்து மருட்பா. திணை—பாடாண். துறையும் வாயுறைவாழ்த்து; அல்லது துறை பொருண்மொழிக்காஞ்சி எனின் அலங்காரம்—சுவையினுள், கல்விபற்றிய பெருமிதம். (ங)

135 திருமால் பரனெனவே தேற்றுதற்கன் பாக
வருமா ரியன்றனையிம் மண்மேற் புலவீ
ரொருமா னிடனென் றுணரா தவனெம்
பெருமானு [1]மென் றுற்றப் பெம்மா னருள்கூர்
[2]பத்தா தடியிணை பாவுமின் னதுவே
யுத்தம விலக்கண முரைசான்
முத்தியை விளக்கு முபபற்சியு [3]மதுவே.

இது செவியறிவுறூஉ மருட்பா. இதுவுந் திணையுந் துறையு மலங்காரமு மது. (ச)

மருட்பா முற்றும்.

பாப்பாவினம் முற்றும்.

---

(மாறனலங்காரப் பாடம்.) [1]மென் றுணர்ந்தப். [2]பத்தர்த மடியிணை பாவுமி னதுவே. [3]மஃதே.

ஸ்ரீ:

# பரிபாடல்.

1\. கருங்கட லுடுத்த காமர்திரு நிலமுதலா
வருங்கடன்மூ வுலகினையும் வரம்பில்பெரு மேனியொடு
மொருங்களந்தன் றகத்தடக்கி யோவாத வுவகையுடன்
பெருந்தகைய மாவலியைப் பிலம்புகவன் சிறையிருத்திப்
பொருந்தமரர்க் கருள்கூர்ந்த பொன்னடித் தாமரையோய்!;

இஃது தைந்தடித்தரவு. இதனுள், ஆசிரியவடி வஞ்சியடி வெண்பா வடி கலியடியென்னும் நான்கடியும்வந்து தளையேழும் விரவியதூஉங் கண்டுகொள்க.

அழகிய வரங்கநின் னவிர்பொலங் கழல்புனை
கழல்புரிந் தருளிய கருமமஃ தொன்றோ
பழமறை பாஅய பாஅண்மையிற் பவித்திரத்
தழல்வளர்த் தாஅருதி தான்றரு கவுதமன்
வெற்பினற் சிறைகுறை குலிச வேந்தனி
னிற்பழி யெய்திய வகலிகைக் கீத்த
கற்படி மத்தினைக் காமர்
பொற்படி வமதாய்ப் புரந்ததொன் றுளதால்;

இஃது தெட்டடியெருத்தம். இதனுள் ஆசிரியத்தளைகளும் வெண் டளைகளும் கலித்தளையும் விராய் ஈற்றயலடி முச்சீராய் வந்தது காண்க. இதனை பொருசாராசிரியர் நேரிசையாசிரியமென்ப.

அஃதான்று [இது ஒழியசை.]

உலகுயிர் தழைதா வுறுபகி ரதியினை
நிலமிசை யுறநிறு வியுமுத வினவே;

மலர்மகண் மகிழ்தா மிதிலையில் வாணொடு
சலமிரு தனுவிற மிதிதலை மையவே;

அலம்வரு பாதன்மு ன்வனென வணிநகர்
நலனுற வுடனுறை தருநசை யினவே;

பலகலை யுணர்வொடு பானிலை முழுதுணர்
